# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – 8

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | சித்திரை–03 | 15–04–2004 | வியாழக்கிழமை | ஓசை –57







# தான் ஒரு பிரகாசமான நட்சத்திரம் என்பதை பிரபாகரன் மீண்டும் ஒருதடவை நிரூபித்துள்ளார்!



## இந்திய சஞ்சிகை புகழாரம்

தானொரு பிரகாசமான நட்சத்திரம் என்பதை தமிழீழ தேசியத்தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் மீண்டும் ஒருமுறை நிரூபித்துள்ளார் என இந்தியப்பத்திரிகை ஒன்றில் வெளிவந்த கட்டுரை தெரிவிப்பதாக இணைய தளம் ஒன்று தெரிவிக்கின்றது.

தமிழீழ தாயகத்திலிருந்து கருணாவை அப்புறப்படுத்த தமிழீழ விடுதலைப்புலிகள் மேற்கொண்ட நடவடிக்கை குறித்து இந்தியப் பத்திரிகை ஒன்று வெளியிட்ட கட்டுரையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்படுகிறது.

இக்கட்டுரையில் தமிழீழ விடுதலைப் புலிகள் கடந்த காலங்களில் எதிர்நோக்கிய சவால்கள் குறித்து குறிப்பிட்டுள்ள கட்டுரையாசிரியர், அச்சவால்களை தமிழீழ தேசியத் தலைவர் எவ்வாறு எதிர்கொண்டு முன்னேறினார் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவ்வகையில், தாயகத்திலிருந்து கருணாவை அப்புறப்படுத்த தமிழீழ விடுதலைப் புலிகள் பாரியளவு உயிரிழப்புக்களைத் தவிர்த்து மேற்கொண்ட நடவடிக்கை குறித்து கட்டுரையாசிரியர் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கருணா விவகாரத்தை விடுதலைப் புலிகள் எவ்வாறு கையாளப் போகின்றார்கள் என அமெரிக்க மற்றும் ஐரோப்பிய இராஜதந்திரிகள் கரிசனை கொண்டிருந்த வேளையில், இப்பிரச்சினையை விடுதலைப் புலிகள் கையாண்ட விதம் குறித்து வியப்புத் தெரிவித்துள்ளதாக இராஜதந்திர வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது. அதேவேளை, கருணா விவகாரத்தை தமக்கு சாதகமாகப் பயன்படுத்த

(8ஆம் பக்கம் பார்க்க)

# கருணா சகாக்களுடன் தப்பி ஓடுவதற்கு சிறிலங்கா இராணுவமே உதவியது!

## உறுதிபடக் கூறுகின்றது ஹிந்துஷ்தான் டைம்ஸ்

**மட்டக்களப்பிலிருந்து கருணா தனது சகாக்கள் எட்டுப் பேருடன் திடீரெனத் தப்பிச்செல்ல முடிந்ததற்கு சிறிலங்கா இராணுவத்தின் உதவியே காரணம் எனத் தங்களுக்கு நம்பகமாகத் தெரியவந்துள்ளதாக ஹிந்துஷ்தான் டைம்ஸ் என்னும் இந்திய நாளிதழின் செய்தி தெரிவிக்கிறது.**

மேலும் அப் பத்திரிகைச் செய்தியில், கருணாவும் அவரது நெருங்கிய சகாக்களும் தப்பியோடி, காட்டிற்குள் ஒழிந்திருப்பதாகவும், கொழும்பில் இருப்பதாகவும், வெளிநாடு சென்றுவிட்டதாகவும் பலவிதமான தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், சிறிலங்கா இராணுவத்தினர்,

(8ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பு ஊடாகக் கருணா நேற்று அவுஸ். பயணம்?

(கொழும்பு)

மட்டக்களப்பில் இருந்து சிறிலங்கா இராணுவத்தின் உதவியுடன் தப்பி ஓடிய கருணா நேற்றுக் காலை கொழும்பிலிருந்து வெளிநாடு ஒன்றிற்குப் பயணமாகியுள்ளதாக கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

பெரும்பாலும் அவுஸ்திரேலியா செல்லலாம் எனக் குறிப்பிடும் இச் செய்திக்குறிப்பு அங்கு அவர் செல்லவுள்ள இடம் பற்றிக் குறிப்பிடவில்லை. இதேவேளை, கருணா வெளிநாடு செல்வதற்கான உதவிகளையும் சிறிலங்கா அரசாங்கமே மேற்கொண்டதாகத் தெரிவிக்கின்றது.

# ஜே.வி.பி.யின் நடவடிக்கை குறித்து சனாதிபதி சந்திரிகா அதிருப்தி

## ஐ.தே. கட்சியுடனான தேசிய அரசு மேலென அபிப்பிராயம்

(கொழும்பு)

ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணியில் பலமான பங்காளியாக தன்னை வெளிக்காட்டியுள்ள மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) பல்வேறு நிபந்தனைகளை விதிக்கின்றமை சனாதிபதி சந்திரிகா தரப்பில் பலத்த அதிருப்தி ஏற்படுத்தியுள்ளது.

எனினும் நிறைவேற்று முறைமையினை மாற்றுவது தேர்தல் முறைமையினை மாற்றுதல் என்பவற்றிக்கு பாராளுமன்றத்தில் சதாரண பெரும்பான்மையாவது பெறவேண்டும்என்பதால் சற்றுஅமைதிப்போக்கை கடைப்பிடிப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்தநிலையில் ஐ.தே.க.

(8ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள்–மட்டு. ராணுவத்தளபதி வவுணதீவில் இன்று சந்திப்பு

மட்டு-அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஸ் மற்றும் மட்டு-அம்பாறைத் தளபதி ராம் ஆகியோரை சிறிலங்கா இராணுவத்தின் 23 டிவிசனின் தளபதி இன்று சந்திக்கவுள்ளார். பிற்பகல் 2.00 மணிக்கு வவுணதீவில் இடம்பெறவுள்ள சந்திப்பில் படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் நல்லுறவைக் கட்டியெழுப்புவது தொடர்பாகக் கலந்துரையாடவுள்ளனர். இச்சந்திப்பில் மட்டக்களப்பு மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவரும் கலந்துகொள்ளவுள்ளார்.

# விசுவமடு துயிலும் இல்லத்தில் நீலனின் வித்துடல் இன்று விதைப்பு

மட்டக்களப்பு மாவட்ட புலனாய்வுத்துறை துணைப் பொறுப்பாளர் லெப்.கேணல் நீலனின் (சீனித்தம்பி சோமநாதன்-ஆரையம்பதி-3மட்டு) வித்துடல் இன்று மாலை விசுவமடு மாவீரர் துயிலும் இல்லத்தில் பூரண இராணுவ மரியாதைகளுடன் புனித விதை குழியில் விதைக்கப்படும்.

மட்டக்களப்பில் இருந்து எடுத்து வரப்படும் வித்துடல் இன்று காலை புதுக்குடியிருப்புக்கு வந்துசேரும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இன்று பிற்பகல் 2மணிக்கு புதுக்குடியிருப்பு மாவீரர் மண்டபத்தில் வித்துடல். மக்களின் வணக்கத்திற்காக வைக்கப்படும் இதனையடுத்து வித்துடல் விசுவமடு மாவீரர் துயிலும் இல்லம் எடுத்துச் செல்லப்படும்.

*இதேவேளை, கருணா குழுவினரால் படுகொலை செய்யப்பட்ட மேஜர் தமிழீழனின் (சதாசிவம் திருக்கேதீஸ்வரன் - மகிழவெட்டுவான், ஆயித்தியமலை-மட்டு) வித்துடல்

(8ஆம் பக்கம் பார்க்க)

### வீரச்சாவு


மட்டக்களப்பு மாவட்டம் கதிரவெளிப் பகுதியில் கடந்த 10ஆம் திகதி துரோகி கருணா குழுவினருடனான மோதலின்போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

லெப். இராமநாதன்

(செல்வம் இராஜேந்திரன் கரவெட்டி நாவற்காடு மட்டக்களப்பு) என்பவரே வீரச்சாவடைந்தவராவார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீர வணக்கம் செலுத்துகின்றனர்.

# பல்லாயிரம் மட்டக்களப்பு மக்கள் லெப்.கேணல் நீலனுக்கு அஞ்சலி



கருணா குழுவினால் படுகொலைசெய்யப்பட்ட மட்டு. புலனாய்வுத்துறை துணைப் பொறுப்பாளர் லெப்.கேணல் நீலனுக்கு மட்டக்களப்பில் நேற்று உணர்வுபூர்வமாக வீரவணக்கம் செலுத்தப் பட்டது. காலையில் இலுப்பையடிச் சேனையில் வித்துடல் மக்களின் வீரவணக்கத்திற்காக வைக்கப்பட்டது. தொடர்ந்து ஆரையம்பதியில் உணர்வுபூர்வமாக வீரவணக்கம் செலுத்தப்பட்டது. இவர் ஐந்தாம் வகுப்புவரை கல்வி கற்ற ஆரையம்பதி இராமகிருஷ்ண மிஷன் பாடசாலையில் வீரவணக்கத்திற்காக வித்துடல் வைக்கப்பட்டது. இதனையொட்டி ஆரையம்பதி கிராமம் முழுவதும் கறுப்புக் கொடிகளாலும் வெள்ளைக்கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. வரிசையாகச் சென்று

(8ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### இடமாற்றம்

கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தில் இயங்கி வந்த வெண்ணிலா திரையரங்கம் 12/04/2004 திங்கள் முதல் கரடிப்போக்கு கிளிநொச்சியில் இயங்க ஆரம்பித்துள்ளது என்பதை திரைப்படரசிகர்களுக்கு அறியத்தருகின்றோம். நேசன் உரிமையாளர். (9372)

### பெயர் மாற்றம்

இதுவரைக்கும் மாலெமாரன் ஆக இருந்த நான் இன்று முதல் எனது பெயரை மாலைமாரன் என மாற்றிக் கொள்கின்றேன். எனது பெயரைக் கையாளும் அனைவரும் மாலைமாரன் என எழுதுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.- மாலைமாரன். (4437)

# தேசிய மட்டப் போட்டிக்கு முதன் முறையாக கிளிநொச்சி மாவட்ட நீச்சல் அணி தெரிவு

(அலுவலக செய்தியாளர்)

கிளி.அரச அதிபரின் அனுசரணையுடன் கிளி.மாவட்டத்தில் முதன் முறையாக நீச்சற் போட்டி நடத்தப்பெற்றுள்ளது. கடந்த 10ஆம் திகதி பள்ளிக்குடாவில் நடைபெற்ற இப்போட்டிக்கான ஏற்பாடுகளை கிளி.மாவட்ட விளையாட்டு அலுவலர் சு.கனகராசா மேற்கொண்டார். இதில் பின்வருவோர் வடக்கு, கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தி 2004ஆம் ஆண்டுக்கான அகில இலங்கை ரீதியான தேசிய விளையாட்டு விழாவில் கலந்து கொள்ளத் தகுதிபெற்றுள்ளனர். ராஜகோபால், (பிறிஸ்ரைல்) பி.தேவநேசன், செ.கியூபேட்ராசா, ம.செபஸ்ரியான், அ.றேகன், ரி.அகிலன், பி.ஞானேஸ்வரன், அ.ரூபன், ரி.நிரோஷன், சு.நகுலேந்திரன், அ.அகுஸ்ரின், எ.றெக்கொன்ஸ்ரன்.

வடகிழக்கு மாகாணம் உருவாக்கப்பட்டபின்னர் கிளிநொச்சி மாவட்ட அணியே முதன்முதல் தேசிய விளையாட்டு விழாவில் நீச்சற் போட்டியில் கலந்துகொள்ள தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேபோல கிளி.மாவட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் முதன் முறையாக சதுரங்கப் போட்டி நடத்தப்பெற்றுள்ளது. கடந்த 12ஆம் திகதி கிளி. மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இப் போட்டியில் முதலாம் இடத்தை திருநாவுக்கரசு சிவரூபனும், இரண்டாம் இடத்தை சித்திரவேலாயுதம் சுதாகரனும், மூன்றாம் இடத்தை இராமச்சந்திரன் சந்திரராஜீம் பெற்றுக்கொண்டனர்.

கடந்த 8ஆம் திகதி கிளி.அரச செயலகவளாகத்தில் நடத்தப்பெற்ற பற்மின்றன் போட்டியில் பின்வருவோர் வடகிழக்கு மாகாணப் போட்டியில் பங்குபற்ற தகுதிபெற்றுள்ளனர்.

தனிப்போட்டி (ஆண்கள்) முதலாமிடம் வி.கேதீஸ்வரன், இரண்டாமிடம் செ.மயூரன், மூன்றாம் இடம் க.குகநேசன்.

இரட்டையர் போட்டியில் முதலாம் இடம் ப.குகநேசன், ஆ.நிர்மலன், இரண்டாம் இடம் இ.விக்னேஸ்வரன், அ.மகேஸ்வரன்,

பெண்கள் (தனி) முதலாம் இடம் புனிதரெட்டினேஸ்வரி, இரண்டாம் இடம் யூஜின்நிலானி, இப்போட்டியும் மாவட்ட அளவில் இம்முறையே முதன்முதலாக நடத்தப்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

நேற்றுப் பூநகரி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவு அணிகளுக்கிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் பூநகரி அணி 3-0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது. மற்றுமோர் போட்டியில் கரைச்சி அணி பளை அணியை 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது. இதன் மூலம் பூநகரி மற்றும் கரைச்சி அணிகள் இறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளன. கிளி. பொதுவிளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிகளுக்கு நடுவர்களாக திருவாளர்கள் த.புவனேந்திரராசா, கலாதரன், சிவநேசன், ஜெயகுமார் ஆகியோர் கடமையாற்றினர்.

இன்று கண்டாவளை-பளை அணிகளுக்கிடையேயும், பூநகரி-கரைச்சி அணிகளுக்கிடையேயும் கிரிக்கெட் போட்டி நடைபெறவுள்ளது. இதில் வெற்றி பெறும் அணிகள் இறுதிப்போட்டியில் மோதும்.

கபடி (ஆண்-பெண்) போட்டியும் எல்லே (ஆண்-பெண்) போட்டியும் எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ளன. 22ஆம் திகதி கரபந்தாட்டம் (ஆண்-பெண்) வலைபந்தாட்டம் ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன. இவை அனைத்தும் கிளி. பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளன. (சோ)

# குன்றும் குழியுமான வீதிகளை புனரமைக்க வேண்டுகை

(மல்லாவி)

பாண்டியன் குளம் நட்டாங்கண்டல் பிரதான வீதிகள் குன்று குழியாக இருப்பதால் பிரயாணங்களை மேற்கொள்ள முடியாமல் மக்கள் அவதிப்படுகின்றனர்.

பாலையடியிலிருந்து செல்வபுரம், பாண்டியன்குளம், நட்டாங்கண்டல் செல்லும் பிரதான வீதிகளில் அண்மையில் பெய்த மழையினால்நீர் தேங்கியுள்ளமையாலும் குன்றும் குழியுமாக இருப்பதால் அவ்விடத்து மக்கள் தங்களின் தேவைகளுக்கு பிரயாணத்தை மேற்கொள்ள முடியாத நிலையில் இருந்து வருகின்றனர். இவ்வீதியினை புனர் அமைக்க சம்பந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்த வேண்டும் என மக்கள் தெரிவிக்கின்றனர்.(24)

# சித்திரைப் புத்தாண்டு தினத்தில் மாட்டு வண்டிச் சவாரிப்போட்டி

வற்றாப்பளை மங்களேஸ்வரா விளையாட்டுக்கழகத்தினால் புதுவருடத்தை முன்னிட்டு நந்திக் கடல் வெட்டையில் மாட்டுவண்டிச் சவாரியும், உழவு இயந்திர பெட்டி கொழுவுதல் போட்டியும் நேற்று முன்தினம் பிற்பகல் 3.00 மணிக்கு கழகப் போசகர் ச.சோமபாலன் தலைமையில் ஆரம்பமானது.

மங்கள விளக்கினை, வற்றாப்பளை வலயப் பொறுப்பாளர் பாரதி ஏற்றிவைக்க தமிழீழத் தேசியக் கொடியினை, முள்ளியவளைப் பிரதேச காவல் பணிமனைப் பொறுப்பாளர் கணேஸ் ஏற்றினார். கழகக் கொடியினை கழகத் தலைவர் கு.அரசரத்தினம் ஏற்றிவைத்தார்.

வண்டில்சவாரி இரு பிரிவுகளாக நடைபெற்றது. எருது மாடு வண்டில்சவாரியில் முதலாம் இடத்தை பூ.வேலாயுதம் முள்ளியவளை, இரண்டாம் இடத்தை சி.ரகுநாதன் பூதன்வயல், மூன்றாம் இடத்தை அ.குமார் வற்றாப்பளை ஆகியோர் பெற்றனர்.

நாம்பன்மாடு வண்டில்சவாரிப் போட்டியில் முதலாம் இடத்தை சி.அகந்தன் வற்றாப்பளை, இரண்டாம் இடத்தை இ.வினோஜன் முள்ளியவளை, மூன்றாம்இடத்தை இ.லிகிதன் முள்ளியவளை ஆகியோர் பெற்றனர்.

உழவுஇயந்திரப்பெட்டி கொழுவுதல் போட்டியில் முதலாம் இடத்தை இ.பிரபாகரன் வற்றாப்பளை, இரண்டாம் இடத்தை சி.தர்மகுலசிங்கம் முள்ளியவளை, மூன்றாம் இடத்தை வே.சிவராசா வற்றாப்பளை ஆகியோர் பெற்றனர்.

இந்த நிகழ்வின் மருத்துவப் பணியினை அளம்பில் பிரதேசதியாக தீபம் மருத்துவமனையினர் ஆற்றினார். இப்போட்டிகளுக்கான பரிசில்வழங்கலும், ஏனைய வினோதமான மைதானப் போட்டிகளும் எதிர்வரும் 18/04/2004 அன்று கழக மைதானத்தில் நடைபெறும் எனத் தலைவர் தெரிவித்தார். (ஆ)(20)

## தபால் மூல வாக்களிப்பு

வடமேல் மாகாணசபைத் தேர்தலில் தபால் மூல வாக்களிப்புக்கான திகதிகள் எதிர்வரும் 16ஆம் 19ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இரண்டு தினங்களிலும் வாக்களிக்கத்தவறும் அரச ஊழியர்கள் தேர்தலுக்கு முன்னர் ஒரு திகதியிலும் வாக்களிக்க முடியும் என உதவி தேர்தல் ஆணையாளர் சேன நாயக்க கூறியுள்ளார்.

# ஒரே நாளில் விசர் நாய்க்கடிக்கிலக்கான 30 பேர் வைத்தியசாலையில் சிகிச்சை!

(மல்லாவி)

வவுனியாவில் விசர் நாய்க் கடிக்கு இலக்காவோர் தொகை அதிகரித்து வருவதாக வைத்திய சாலை புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

ஒரே நாளில் விசர் நாய்க்கடிக்கு இலக்கான 30 பேர் வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட சம்பவமொன்று கடந்த சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்றுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமையே விசர் நாய்க்கடிக்கிலக்காகி முப்பது பேர் இவ்வாறு சிகிச்சை பெற்றனர். அன்றைய தினம் மல்லாவியைச் சேர்ந்த ச. காந்தரூபன் (வயது-46), மாமடுவை பகுதியைச் சேர்ந்த சமன்மலின் (வயது-21), புஸ்பம்மா (வயது-72) ஆகியோரும் இதில் அடங்குவர்.

இதேவேளை, விசர் நாய்க் கடிக்கு இலக்காகி சில தினங்களில் ஒருவர் இறந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (24)

## உந்துருளிகள் இயலவிற்பனை

**(ஏலவிற்பனை)**

**இயங்கும் நிலை/உதிரிகளாக்கும் நிலை**

**பார்வையிடும் காலம் :- 15,16,17/04/2004.**

**இயலம் விடப்படும் காலம் :- 20/04/2004.**

**நேரம் :-காலை 10.00மணி**

**இடம் :- உடைமைப்பகுதிப் பணிமனை**
**வேணாவில்,**
**புதுக்குடியிருப்பு.**

**குறிப்பு:- கேள்விக்கான கட்டணம்-ரூபா-200/=**

(7183)

## ஓராண்டு நினைவஞ்சலி

அமரர் செல்லையா சபாபதி
(ஓய்வுபெற்ற நீர்ப்பாசன பிரிவு உதவியாளர்)

கைதடி நாவற்குழி என்பவரின் நினைவஞ்சலி விளம்பரத்தில் நேற்று நடைபெற்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனை மற்றும் நிகழ்வுகளில் உறவினர்கள் நண்பர்கள், அனைவரையும் கலந்துசிறப்பிக்குமாறு கேட்கப்பட்ட விடயம் தவறுதலாக இடம்பெறவில்லை. தவறுக்கு வருந்துகின்றோம்.

## 33ஆம் நாள் நினைவலையும் நன்றிநவிலலும்

மலர்வு: 24 09 1934



உதிர்வு: 14 03 2004

### அமரர் திரு. முத்தையா தேவராஜா

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், திருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா தேவராஜா அவர்களின் இறுதிக்கிரியைகளின் போது குடும்பத்தாரிற்கு சகல விதத்திலும் உதவி புரிந்தவர்கட்கு இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு 15-04-2004 அன்று நடைபெறும் மதிய போசன வைபவத்தில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(4439) **மனைவி, பிள்ளைகள்.**

உ
சிவமயம்

## "நாகதம்பிரான் நல்லருள் நாடெங்கும் பாலிக்குக"

**புளியம் பொக்கனை நாகதம்பிரான் ஆலய பரிபாலன சபை**

## எமது இதயம் கனிந்த நன்றிகளை சமர்ப்பிக்கின்றோம்

கடந்த 04.04.2004 ஞாயிற்றுக்கிழமை நடந்தேறிய மேற்படி ஆலயப்பொங்கலுக்கும் 28.03.2004 விளக்கு வைத்ததைத் தொடர்ந்து பண்டம் எடுக்கும் வைபவத்திற்காக தென்மராட்சிக்கு ஊர்வலமாக வண்டில்களில் சென்று மீண்டும் திரும்பி வரும்வரையும் சகல ஒத்துழைப்புக்களையும், உதவிகளையும் இன்முகத்தோடு செய்து பொங்கல் விழா சிறப்புடனும், அமைதியாகவும் இனிதே நடந்தேற உதவிய சகல அரசதிணைக்களங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பினர், தமிழீழ போக்குவரத்துக்கழகத்தினர், வட்டக்கச்சி காவல்பணிமனைப் பொறுப்பாளரும் அவரின் கீழ் பணியாற்றியவர்கள், தொண்டர்கட்கும், பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள், சாரணர் இயக்கம் மற்றும் அனைவருக்கும் கண்டாவளை பிரதேச செயலாளர் திரு.எஸ்.எஸ். சிவசொருப நாதபிள்ளை அவர்கட்கும் ஆற்றிய பலதரப்பட்ட சேவைகட்கும் எமது நன்றிகளை சமர்ப்பிப்பதுடன் மேற்படி ஆலய சபையினர் காப்பாளரும் கிளி.மாவட்ட அரசாங்க அதிபர் உயர் திரு-தி. இராசநாயகம் அவர்கட்கும் விசேடமாக எமது சிரம் தாழ்ந்த நன்றிகளை சமர்ப்பிக்கின்றோம்.

(சி.9443) **ஆலய பரிபாலன சபையினர்.**

# ஈராக்கிலிருக்கும் தமது நாட்டவரை வெளியேற பிரான்ஸ்,ரஷ்யா அவசர வேண்டுகோள்!

## ஊடகவியலாளர் ஒருவரும் காணாமல்போனார்

**ஈராக்கிலுள்ள தமது நாட்டு பிரஜைகளை உடன் நாடு திரும்புமாறு பிரான்ஸ் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகள் அறிவித்துள்ளன.**

ஈராக்கில் நெருக்கடிகள் வலுவடைந்து வரும் நிலையில் இந்த அறிவிப்பினை இருநாடுகளும் விடுத்துள்ளன.

இதேவேளை பிரான்ஸ் செய்தி நிறுவனமொன்றின் செய்தியாளர் ஒருவர் ஈராக்கில் காணாமல்போயுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. இவர் முஸ்லிம் தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது.

இந்நிலையில் ஈராக்கில் தங்கியுள்ள பன்னிரெண்டுக்கும் மேற்பட்ட வெளிநாட்டவர்கள் இதுவரை காணாமல் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ஏற்கனவே முஸ்லிம் தீவிரவாதிகளின் பிடியிலுள்ள ஜப்பானிய பணயக் கைதிகளின் நிலை குறித்தும் இதுவரை எவ்வித தகவல்களும் வெளியாகவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது



காஸாவில் இஸ்ரேலிய படையினரால் கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்படும் பலஸ்தீனர்.



ஒரு வருட காலம் ஈராக்கில் பணிபுரிந்து விட்டு நேற்று முன்தினம் நாடு திரும்பிய அமெரிக்க இராணுவத்தின் பொறியியல் பிரிவு வீரர் ஒருவரை கட்டித் தழுவிஅழும் அவரின் தாயார்.

# இத்தாலி இராணுவத்தினரையும் அகற்ற முஸ்லிம் தீவிரவாதிகள் நிர்ப்பந்தம்!

## -ஈராக்கில் மற்றுமொரு நெருக்கடி


ஈராக்கில் அமெரிக்க கூட்டணிப் படையினருடன் இணைந்து பணியாற்றும் இத்தாலி இராணுவத்தை உடனடியாக ஈராக்கைவிட்டு வெளியேற வேண்டுமென இஸ்லாமிய தீவிரவாதிகள் எச்சரித்துள்ளனர்.

அல்ஜசீரா அரபு தொலைக்காட்சி மூலமாக இவ்எச்சரிக்கை நேற்று முன்தினம் விடுக்கப்பட்டுள்ளது. இதேவேளை பணயக்கைதிகளாக தீவிரவாதிகளால் பிடித்து வைக்கப்பட்டுள்ள 04 இத்தாலியர்களையும் இந்த தொலைக்காட்சி காண்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இத்தாலியப்படையினர் ஈராக்கைவிட்டு வெளியேறும் திகதியை உடனடியாக அறிவிக்க வேண்டுமென தொலைக்காட்சி மூலமான எச்சரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எமது கோரிக்கை அங்கீகரிக்கப்படும் வரை பணயக்கைதிகளை விடுதலைசெய்யமாட்டோமெனவும் தீவிரவாதிகள் கூறியுள்ளனர்.

இது இவ்வாறிருக்க தீவிரவாதிகள் எத்தகைய எச்சரிக்கைகளை விடுத்தாலும் அவர்களது பணி ஈராக்கில் தொடருமென இத்தாலியப் பிரதமர் தெரிவித்துள்ளார்.



மொசூலில் இறந்த அமெரிக்க வீரர்கள் நினைவாக அமைக்கப்பட்ட நினைவிடத்தின் முன்பாக வணக்கம் செலுத்தும் படைவீரர் ஒருவர்.

# படையினரை உடனடியாகத் திருப்பியழைக்கும் திட்டமெதுவும் அமெரிக்காவிடம் கிடையாது

## -சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் அறிவிப்பு

(வொஷிங்டன்)

ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப்படையினர் உடனடியாக திருப்பியழைக்கப்படமாட்டார்களென அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் தெரிவித்துள்ளார்.

வெள்ளைமாளிகையில் நேற்று முன்தினம் செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்க படையினருக்கு எதிராக தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன. வெளிநாட்டவர்கள் பலர் பணயக்கைதிகளாகக் கடத்தப்பட்டு வருகின்றனர். இருப்பினும் இவைகள் எமது நிலைப்பாட்டில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தி விடப்போவதில்லை. ஈராக்கிய மக்களிடம்,ஏற்கனவே அறிவிக்கப்பட்டதற்கமைய ஜூன் மாதம் 30ஆம்திகதி ஈராக்கிய நிர் வாகம் கையளிக்கப்படும் என்றும் சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் உறுதிய ளித்துள்ளார்.

### திருப்பியழைக்க தீர்மானம்

ஈராக்கில் கடமையாற்றுகின்ற பிலிப்பைன்ஸ் படையினரும் மனிதாபிமான நிவாரணப் பணியாளர்களும் விரைவில் திருப்பி அழைக்கப்படுவார்களென பிலிப்பைன்ஸ் சனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஈராக்கில் புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு உதவுவதே எமது நோக்கம் ஆயினும் எமது நிவாரணப்பணியாளர்களின் பாதுகாப்பு முக் கியமாகுமென அவர் மேலும் தெரி வித்துள்ளார்.

### கடந்த வாரத்தில் 67 படையினர் பலி!

ஈராக்கில் கடந்த வாரம் இடம் பெற்ற தாக்குதல்களில் 67 அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

மேலும் இதுவரையான மோதல்களில் அறுநூறிக்கும் மேற்பட்ட அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜோர்ஜியா சமாதான பேச்சுக்கள் தோல்வி!

ஜோர்ஜியாவில் அரசாங்கத்திற்கும், தீவிரவாதிகளுக்குமிடையே நடைபெற்றுவந்த பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிவடைந்துள்ளன.

கடந்த ஒரு மாதமாக இப் பேச்சுவார்த்தை தொடர்ந்தது.

இதேவேளை அரசாங்கம் முன்வைத்த ஆயுதக் கையளிப்புத்திட்டத்தைத் தீவிரவாதிகள் ஏற்றுக்கொள்ளவில்லை அத்துடன் ஆயுதக் களைவு குறித்து முன்வைக்கப்பட்ட எந்த உடன்பாட்டையும் அவர்கள் அங்கீகரிக்கவில்லை இதனைத் தொடர்ந்தே பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிவடைந்ததாக ஜோர்ஜிய பிரதமர் நேற்றுமுன்தினம் ராய்ட்டருக்குத் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்கர்களுடன் தொடர்புடைய நால்வர் சடலங்களாக மீட்பு !

ஈராக்கில் அமெரிக்கர்களுடன் தொடர்புகளைக் கொண்டிருந்த 04 பேர் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

இதனை அமெரிக்கப் படையினர் உறுதிசெய்துள்ளனர். கடந்த மூன்று நாட்களாக அமெரிக்கப்படையினர் உட்பட 07 பேர் ஈராக்கில் காணாமல் போயுள்ளனர் இவர்களில் நான்கு பேரே கொல்லப்பட்டவர்களெனத் தெரியவருகிறது.



பலூஜாவில் தேடுதலில் ஈடுபட்டுள்ள அமெரிக்க படையினரால் கைது செய்யப்பட்ட ஈராக்கியர் ஒருவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதை படத்தில் காண்க.

# இழந்த உரிமைகளைப் பெற தி.மு.க. கூட்டணியை ஆதரியுங்கள்

## - கருணாநிதி வேண்டுகை

(சென்னை)

இம்முறை தேர்தலில் தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்றால் விவசாயிகளுக்கான இலவச மின்சாரம் மீண்டும் வழங்கப்படும் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி உறுதியளித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கோவையில் பிரச்சாரக் கூட்டத்தில் கருணாநிதி இவ்வாறு உரையாற்றியுள்ளார்.

11 ஆண்டு காலமாக ஏழை விவசாயிகள், நடுத்தர விவசாயிகள் என எல்லா விவசாயிகளும் அனுபவித்த இந்த இலவசமின்சாரம் மீண்டும் வழங்கப்படும். தற்போது தமிழகத்தில் இலவசமின்சாரம் தொடர்பாக நடாத்தப்படும் நாடகங்கள் எல்லாம் எமது ஆட்சியில் நிறுத்தப்படும் என்று உறுதியளிப்பதாகவும் நெசவாளர்களைக் காப்பாற்றும் வகையில் அதற்கான வரியும் ரத்துச் செய்யப்படும் என்றும் உறுதியளித்துள்ளார்.

அத்துடன் பாட்டாளி மக்களும் ஊழியர்களும் இழந்த தங்கள் உரிமைகளை மீண்டும் பெறுவதற்காக மக்களவைத் தேர்தலில் தி.மு.க. கூட்டணிக்கு ஒட்டு மொத்தமான ஆதரவை வழங்க வேண்டுமென்று மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்

# தேர்தல் ஆணையகத்தின் அனுமதி பெறாத தொலைக்காட்சி விளம்பரங்களுக்கு தடை!

(புதுடில்லி)

மக்களவைத் தேர்தல் காலத்தில் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படும் விளம்பரங்கள் தேர்தல் ஆணையகத்தின் அனுமதி பெற்ற பின்னரே ஒளிபரப்பப்படவேண்டும்.

இவ்வாறு உச்ச நீதிமன்றம் நேற்றுக்காலை உத்தரவிட்டுள்ளது.

தேர்தல் காலத்தில் தனியார் தொலைக்காட்சிகள் பல மாற்றுக்கட்சிகளை இழிவுபடுத்தும் வகையில் தேர்தல் விளம்பரங்களை ஒளிபரப்பிவருகின்றன.

தனிநபர்களைத் தரக்குறைவாக விமர்சனம்செய்துதனியார் தொலைக்காட்சிகள் விளம்பரங்கள் ஒளிபரப்பி வருவதாக, இதனை எதிர்த்து மத்திய தகவல் ஒளிபரப்புத்துறை அமைச்சு உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தது. இதனையடுத்து உச்சநீதிமன்றம் தேர்தல் ஆணையகத்தின் அனுமதி பெற்றே எந்தத் தேர்தல் விளம்பரமானாலும் ஒளிபரப்பப்பட வேண்டுமென்று நேற்று உத்தரவிட்டுள்ளது. விளம்பரம் செய்யும் சம்பந்தப்பட்ட அங்கீகரிக் கப்பட்ட அரசியல் கட்சிகள் மூன்று நாட்களுக்கு முன்பும், பிறகட்சிகள் ஏழுநாட்களுக்கு முன்பும் தேர்தல் ஆணையகத்திடம் அனுமதிக் கடிதம் பெறவேண்டும் என்றும் உத்தரவிடப் பட்டுள்ளது.

# வன்னிக்கு சீரான தொலைபேசிச்சேவை எப்பொழுது கிடைக்கும்?



கிளிநொச்சிக்கான தொலைத்தொடர்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு சுமார் ஒன்றரைவருடங்களைத் தாண்டி விட்டது எனினும் இதுவரை அதனால் உரிய பலனைபெற முடியாநிலையே இன்றும் காணப்படுகிறது. இது கிளிநொச்சிக்கு மட்டுமானதாக அல்லாமல் வன்னிக்கானதாகவும் இருக்கின்றமை மேலும் கவனத்திற்கு உரிய தாகும்.

தொலைத் தொடர்பு வசதிகள் முற்றாக மறுக்கப்பட்டிருந்த யுத்த சூழலில் இந்த மக்கள் வெளிநாடுகளில் உள்ள தமது உறவுகளுடன் தொடர்பு கொள்வதற்கு இராணுவக் கெடுபிடிகள் நிறைந்த புளியங்குளம், உயிலங்குளம், சோதனைச் சாவடிகளில் நீண்ட நாட்கள் தங்கிநின்று பெரும் துயரங்களின் மத்தியில் வவுனியா சென்று தமது உறவுகளுடன் தொடர்பு கொள்ளவேண்டியநிலை காணப்பட்டது.

சாதாரணமாக தமது உறவுகளுடன் தொலை பேசியூடாகத் தொடர்பு கொள்வதற்குக்கூட அனுமதி மறுக்கப்பட்டநிலையில் மக்கள் அவலப்பட்டனர்.

இந்த நிலையில் யுத்தம் நிறுத்தப்பட்டு சமாதான சூழல் உருவாக்கப்பட்டதன்பின்னர் தொலைபேசி வசதிமறுக்கப்பட்டிருந்த இந்தமக்களின் பயன்பாட்டுக்காக தொலைபேசி வசதிகள் கிளிநொச்சிக்கு கொண்டுவரப்பட்டன. இவ்வாறு மக்களின் வசதிக்காக கிளிநொச்சிக்கு கொண்டுவரப்பட்ட தொலைபேசியின் இயங்கு நிலைக் கோளாறின் காரணமாக அச்சேவை மக்களை ஆத்திரமடையச் செய்துள்ளது. இந்த நிலையில் இதில்முக்கிய பிரச்சினையாக

- ☐ தொலைபேசி இயங்காத நிலை.
- ☐ ஒரு இலக்கத்தை அழுத்தினால் பல நிமிடங்களின் பின்னர் அது சென்றடைதல்
- ☐ அவ்வாறு சென்ற அழைப்பு திடீர்திடீரென அறுந்து போதல்
- ☐ சிலவேளைகளில் அழைப்பை ஏற்படுத்து வதற்குத் தயாராகும் போது குறித்த இணைப் பில் வேறு யாரோ உரையாடிக் கொண்டிருத்தல்
- ☐ தொலைத் தொடர்பு இணைப்பில் கோளா றுகள் தொடர்ச்சியாக ஏற்படுதல்.

இது போன்ற பல பிரச்சினைகள் தொடர்ச்சியாக ஏற்பட்டுவருகிறது. இத்தகைய பழுது கள் திருத்தப்படாத வரை பாவனையாளர்கள் இதில் திருப்தி அடையமாட்டார்கள்

2002ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிளி நொச்சி தபாலக வளாகத்தில் கட்டுப்பாட்டு மையம் அதாவது நடமாடும் தொலைத்தொடர்பு நிலையம் அமைக்கப்பட்டு அத்தியாவசியமாக தொலைத் தொடர்பு இணைப்பு தேவைப்படும் இடங்கள் தெரிவு செய்யப்பட்டு 30 இணைப் புக்கள் வழங்கப்பட்டன. இதனால் மக்கள் அதிக நன்மைகளைப்பெற்றனர். 30 இணைப்புக்கள் மாத்திரம் வழங்கக்கூடிய நிலையில் மேலும் 30 இணைப்புக்கள் மேலதிகமாக இணைக் கப்பட்டு மொத்தம் 60 இணைப்புக்கள் வழங்

> *கிளிநொச்சி இன்று ஒரு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த நகரமாக அரசியல் இராஜதந்திர மையமாக உருப் பெற்றிருக்கின்றது. இந்த நகருக்கு சிங்கள கிராமப்புறத்தில் இருந்து பாவனை விலக்கப்பட்ட தொலைத் தொடர்பு இயங்கு கருவிகளைக் கொண்டு வந்து பாவனைக்காக வழங் கிபதுதான்.*

கப்பட்டன.. இவ்வாறு இணைப்புக்கள் அதிக ரிக்கப்பட்டவுடன் தொலை பேசி இணைப் புக்களில் கோளாறுகள் ஏற்பட ஆரம்பமானது இவ்வாறு தொடர்ச்சியாக இணைப்புக்களில் கோளாறுகள் ஏற்பட்டதனால் பாவனையாளர் களால் உரிய நேரத்தில் தொலைபேசியைப் பயன்படுத்த முடியாதநிலை உருவானது. அத்துடன் இணையத்தள மற்றும் மின்னஞ்சல் பாவனைகள் அனைத்தும் முற்றாக செயலி ழந்தது . இவ்வாறு தொலைபேசி இணைப்புகள் சீரான முறையில் இயங்காதமைக்கு பல காரணங்கள் உள்ளன. குறிப்பிட்ட இணைப் புக்களை விட மேலதிகமாகப் பல இணைப் புக்களை வழங்கியமை, தொலை பேசி இணைப்பு க்களின் செயற்பாடுகளை முகாமைத்துவப்ப டுத்துபவர்கள் துறைசார்ந்த அறிவுள்ளவர்களாக இல்லாமை இங்கே கடமையாற்றுபவர்கள் அதன் யாழ்ப்பாண பரிவர்த்தனை நிலையத் துக்கு குறித்த இலக்கம் இயங்கவில்லை என்பதைக் கூறக்கூடியவர்களாக மாத்திரம் உள்ளனர். எந்தப் பகுதியில் பழுது ஏற்பட் டிருக்கிறது என்பதை சரியாக இனங்காண முடி யாத நிலையில் அவர்கள் உள்ளனர். இவ்வாறா னவர்கள் இங்கு கடமையாற்றுவதால் ஒருஇணைப் பில் ஏற்படுகின்ற பழுதை சீர்செய்வதற்கு சிலவேளைகளில் பத்து நாட்கள் கூட தாமதம் ஏற்படுகிறது. இதில் வேடிக்கையானதும் கவலைதரக்கூடியதுமான விடயம் என்ன வென் றால் கிளிநொச்சி இன்று ஒருஅரசியல் முக்கியத் துவம் வாய்ந்த நகரமாக அரசியல் இராஜதந்திர மையமாக உருப்பெற்றிருக்கின்றது. இந்த நகருக்கு சிங்கள கிராமப்புறத்தில் இருந்து பாவனை விலக்கப்பட்ட தொலைத் தொடர்பு இயங்கு கருவிகளைக் கொண்டு வந்து பாவனைக்காக வழங்கியது தான் ..

இந்த நிலையில் பரந்தனில் 'சிறிலங்கா ரெலிக்கொம் 'பரிவர்த்தனை நிலையம் அமைக் கப்பட்டு தைத்திருநாள் திறந்துவைக்கப்பட்டது. பரந்தன் தொலைத்தொடர்பு பரிவர்த்தனை நிலையம் திறந்து வைக்கப்பட் டதன் மூலம் இதுவரை நாட்களும் (கிளி தபாலகத் தில் இயங்கியபோது) தொலைத்தொடர்பு இணைப்புக்களில் இருந்துவந்தகோளாறுகள் இல்லாது மக்களால் சீரான திருப்தியான வகையில் எவ்விதஇடையூறுகளும் இன்றி தொலைபேசியைப் பயன்படுத்த முடியும் என உறுதி வழங்கப்பட்டது. இப்போது பரந்தனில் அமைக்கப்பட்டுள்ள புதியபரிவர்த்தனை நிலையம் நவீன கருவிகள் பொருத்தப்பட்டு நவீனமுறையில் உருவாக்கப்பட்டது என்றும் இதிலிருந்து 500 இணைப்புக்கள் வழங்கமுடியும் எனவும் உறுதியளிக்கப்பட்டு, திறந்து வைக்கப்பட்டது. ஆனால் திறந்து வைக்கப்பட்ட அன்றிலிருந்தே தொலைபேசி சரியாக இயங்க மறுத்தது.

பரந்தனில் ஆரம்பிக்கப்பட்டநாளில் இருந்து இன்றுவரையில் தொலைபேசி இணைப்புகள் சீராக இயங்கவில்லை. தொடர்ச்சியாக தொலை பேசியில் ஏற்பட்டுள்ள கோளாறு பாவனையாளர் களை விசனமடையச் செய்துள்ளது இங்கு கவனிக்கவேண்டிய விடயம் என்ன வென்றால் இதுவும் ஒரு பழையபரிவர்த்தனை கருவி கொண்டு இயங்குவதுதான்

அண்மையில் வெளியாகியிருந்த க.பொ.த (சாதாரண) பரீட்சை முடிவுகள் வெளியாகிய சில நிமிடங்களிலே இணையத்தளம் ஊடாக அனைவரும் பார்க்கமுடிந்தது. ஆனால் வன்னி மாணவர்கள் நீண்ட நெடும் தூரத்துக்கப்பால் இருந்து இணையத்தள நிலையங்களுக்கு தமது பெறுபேறுகளைப் பார்ப்பதற்காக வந்து குவிந்த போதும் தொலைபேசி இணைப்புகள் சீராக இயங்காத காரணத்தால் பலமணி நேரம் வரை காத்திருந்து பயன் ஏதும் இல்லாது தமது வீடுக ளுக்குத் திரும்பியமை பெரும் சோகமாகும்.

இன்று இணையத்தளத்தை முற்று முழுதாகப் பயன்படுத்தி அதில் பறந்து திரியும் நிலையில் ஏனைய பகுதி கல்விச் சமூகம் இருக்கின்ற நிலையில் வன்னியின் மாணவர் சமூகம் இணையம் பற்றிய அடிப்படை அறிவைக் கூடப் பெறமுடியாது தமது காலத தைக் கழிக்கின்ற அவலம் நிறைந்த வாழ்வை வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இந்த நிலையில் அறிவியல் ரீதியாக எமது மாணவர்கள் பின் தங்கிய நிலையிலேயே வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

ஒரு இணைப்புக்கு 23000 ரூபா பணத்தை செலுத்தித்தான் பெறவேண்டும் சரியாக இயங்காத தொலைபேசி இணைப்பைப் பெறு வதற்கு 23000 ரூபாவை செலுத்தி இணைப் பைப் பெற்று வீட்டில் வைத்துவிட்டு அது இயங்காத காரணத்தால் வேறு இடங்களில் பணம் செலுத்தித் தொடர்புகளை ஏற்படுத்த வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. நாம் பணம் செலுத்திப் பெற்ற தொலைபேசி இயங்கியதோ இல்லையோ மாதாமாதம் 1500 ரூபா பணம் செலுத்த வேண்டும். சில இடங்களில் தொலை பேசி இணைப்பை பெறுவதற்கான பணம் 23000 ரூபாவையும் செலுத்தி 3 மாதங்கள் தாண்டியும் இது வரை இணைப்புக்கள் வழங்கப்படாமலே உள்ளது.

தொலை பேசி இணைப்புக்கள் சரியாக இயங் காத நிலை குறித்து நாம் அதன் பயன்பாட் டாளர்கள் சிலருடன் தொடர்பு கொண்டு அது பற்றிக் கேட்டோம் அந்த வகையில் சுமங்கலி நகை மாட உரிமையாளர் மகேந்திரநாதன் என்பவரைச் சந்தித்து "ரெலிபோன் சரியாக வேலை செய்கிறதா?" என்று கேட்டேன்?. "தம்பி நாம் ரெலிபோன் எடுத்ததிலிருந்து இரவில் வேலைசெய்யப் பஞ்சிப்படுது. சில வேளை களில் பகலிலும் வேலை செய்வதில்லை போய் சொல்லுவதும் திருத்துவதும் தான் வேலையாக இருக்கின்றது। இப்போது தொலைபேசி இயங்காது விட்டால் நாம் திருத்துமாறு போய்ச் சொல்வதே இல்லை. அந்தளவுக்கு வெறுத் துவிட்டது" என்றார்.

அடுத்ததாக தமிழ்க்கங்கை புடவை மற்றும் அழகுசாதனப் பொருள் விற்பனை நிலைய உரிமையாளர் கு. மகேந்திரம் என்பவரை சந்தித்து "உங்கள் தொலைபேசி எப்படி? பழுது இல்லாமல் சரியாக வேலை செய்கிறதா?" என்று கேட்டேன்.

" தம்பி சிறிலங்கன் ரெலிக்கொம் பகலில்

**அ. லோகீசன்**

மாத்திரம் அரைநாள் தான் சேவை. இரவு ஒரு பொழுதும் பகலில் அரைப் பொழுதும் சேவை இல்லை. என்றுதான் நான்சொல்லுவேன்" என்று முடித்தார்.

"நீங்கள் ஒரு வியாபார நிலைய உரிமை யாளர். உங்களுக்கு தொலைபேசி மிகவும் அவசியமான ஒன்று. அது சீராக இயங்காததால் உங்கள் வியாபாரத்தில் எத்தகைய பாதிப்புக் களை ஏற்படுத்தியுள்ளது? "எனக் கேட்டேன்.

" நாங்கள் எங்களது வியாபாரத் தேவை களுக்காகத் தொடர்பு கொள்ள முயற்சித்தால்

> *தொலைபேசிஇயங்கவில்லை என்று பரந்தனுக்கு அறிவித் தால், அவர்கள் யாழ்ப்பாணத் துக்கு அறிவிக்கச்சொல் கிறார்கள். யாழ்ப்பாணத் துக்குச் சொன்னால் பரந்த னுக்கு செல்லுங்கள் என் கிறார்கள் பரந்தனில் திருத் துபவர்கள் இல்லை என் கிறார்கள் என்ன நடக்கிறதோ தெரியாது.*

தொலை பேசிஇயங்காது அதனால் ஏனைய கடைகளுக்குச் சென்று பார்ப்போம் அங்கும் இயங்காது ஆத்திரத்தில் மீண்டும் வந்து இருப்பது தான். எப்படி இருந்தாலும் இரவு 6.30 மணியுடன் தொடர்பு நிறுத்தப்பட்டுக் காலை8.00 மணியின் பின்தான் மீண்டும் தொடர்பு கிடைக்கும் சிலவேளைகளில் அதுவும் இல்லை சிலவேளைகளில் நாங்கள் கதைப்போம் என்று எடுத்தால் வேறுயாரோ கதைத்துக் கொண்டி ருப்பார்கள் நாம் யாருக்குக் காசு கட்டுகிறோமோ தெரியாது.

தொலைபேசி இயங்கவில்லை என்று பரந்த னுக்கு அறிவித்தால், அவர்கள் யாழ்ப்பாணத் துக்கு அறிவிக்கச்சொல்கிறார்கள் யாழ்ப்பாணத் துக்குச் சொன்னால் பரந்தனுக்கு செல்லுங்கள் என்கிறார்கள் பரந்தனில் திருத்துபவர்கள் இல்லை என்கிறார்கள் என்னநடக்கிறதோ தெரி யாது.

நாம் தொலைபேசிபெற்றதிலிருந்து எமது தேவைக்காகக் கதைத்ததைவிட திருத்துவதற் காகக் கதைத்ததே அதிகம்; இது பற்றித் தொலைத் தொடர்பு ஒழுங்கு படுத்தல் பிரிவில் பல தடவை முறையிட்டிருக்கிறோம்" என்றார்.

"கொழும்புப் பகுதிகளில் எல்லாம் பழுதடையாத ரெலிபோன், ஏன் இங்கே மட்டும் பழுதடைகிறது?"ஏதோ காட் பழுதடைகிறதாம் அதனால்தான் அடிக்கடி பழுது வருகிறதாம் என்று முடித்தார்."

கந்தையா பல்பொறி உதிரிகள் வாணிப உரிமையாளர் கந்தையா ஜெயபாலன் என்பவ ரைச் சந்தித்தோம்.

" தினமும் பின்னேரங்களில் தான் பிரச்சினையாக இருக்கிறது பல தடவை அவர்களிடம் முறையிட்டிருக்கிறோம் இன்னும் சரியாக வரவில்லை" என்றார்.

கிளிநொச்சியைச் சேர்ந்த மாணவனான சசி என்பவர் தெரிவிக்கையில், " கிளிநொச்சியில் மட்டும் தான் தொலைபேசி வசதி உள்ளது. ஆனாலும், அது எமக்கு எந்த வகையிலும் பயன்படவில்லை இது இருந்து தான் என்ன இல்லாது விட்டால் தான் என்ன எல்லாம் எமக்கு ஒன்றுதான்" என்றார் அந்த மாணவன்.

அடுத்து தொலைபேசியில் கதைத்து விட்டு வெளியேறிக் கொண்டிருந்த குமாரசாமி (வயது 56) என்பவரை, "எப்படி தெளிவாக கதைக்க முடிகிறதா?" எனக் கேட்டேன் ("என்ன தம்பி வெளிநாட்டில் நிக்கிற என்ர பிள்ளையோட கதைப் பம் எண்டு வந்தன் அது எத்தின தரம் நிண்டு நிண்டு வந்தது ஒருவிசயத்தைக் கதைக்கக்கூட ஏலாமல் கிடக்கு இது என்ன கலிகாலம் தம்பி நான் கடைசியாக் கதைக்கேல்ல வைச்சிட்டுப் போறன் பேந்து கொஞ்ச நேரம் கழிச்சு வந்து பாப்பம் என்று கூறிக் கொண்டு நகர்ந்தார்.

இப்படித்தான் கிளிநொச்சியில் தொலைபேசி நிலவரம் போய்க்கொண்டிருக்கிறது. இந்த நிலை உருவாக என்ன காரணம் என அறிவதற்குப் பரந்தன் பரிவர்த்தனை நிலையத்துக்குச் விரைந் தேன் நேரம் மூன்று மணி அங்கு காவலாளி தனி யாக நின்று "எவரும் இல்லை" என்று கைவிரித் தார். இந்த நிலை எத்தனை காலத்துக்குத் தொடரப்போகிறது...என்பது பாவனையாளர்கள் மத்தியில் உள்ள கேள்வி.

இந்தப்பிரச்சினை பற்றிச் சம்பந்தப்பட்டவர்கள் அனைவருக்கும் தெரியப்படுத்தியுள்ள நிலை யில் இதனை எவரும் சீர்செய்து தராத நிலை யில் தொலைத் தொடர்பு ஒழுங்கு படுத்தல் பிரிவினர் இந்த விடயத்தில் அதிக அக்கறை எடுத்துத் தடங்கலற்ற தொலைபேசிப் பாவனையைத் தமக்கு வழங்க வேண்டும் என்பதே மக்களது நிலைப்பாடாகும்.

# இரத்த தானம்

எமது உடலில் சராசரியாக 5 லீற்றருக்கு மேற்பட்ட இரத்தம் தொடர்ச்சியாக சுற்றியோடுகின்றது. இதயம் எனப்படுகின்ற பம்பி தொடர்ச்சியாக இடையறாது இத்தொழிலைச் செய்கிறது. இதிலிருந்து நாடிகள் எனப்படுகின்ற பெரிய குழாய்களில் குருதி சென்று தலை, புன்னாடிகளாகப் பிரிந்து மேலும் மயிர்த்துளைக் குழாய்களாக வலைப்பின்னலொன்றைக் கலங்களிற்கிடையில் ஏற்படுத்திப் பின் புன்நாளங்கள், நாளங்கள் வழியாக மீண்டும் குருதி இதயத்தைவந்தடைகின்றது எந்தச் சந்தர்ப்பத்திலும் சுற்றியோடுகின்ற குருதி குழாய்களை விட்டு வெளிவருவதில்லை, எனவேதான் நாங்கள் இதனை மூடிய குருதிச் சுற்றோட்டம் என்கின்றோம்

## குருதியின் கூறுகள்

குருதியில் திண்ம, திரவக் கூறுகள் காணப்படுகின்றன. திண்மக் கூறுகள் எனும்போது இதில் குருதிக் கலங்களே பெரும்பாலும் காணப்படுகின்றன.

- i செங்குருதிக்கலங்கள்,
- ii வெண்குருதிக்கலங்கள்
- iii குருதிச் சிறுதட்டுக்கள்

திரவக் கூறுகளில் பெரும்பகுதி நீராகும் அத்துடன் இதில் கரையக் கூடிய சில புரதங்களும் காணப்படுகின்றன.

## குருதிச் சுற்றோட்டத் தொகுதியின் நன்மைகள்

i எமது உடலியக்கத்திற்குத் தேவையான சக்தியைப் பெற்றுக்கொள்வதற்குரிய தகனத் துணையியாக $O_2$ காவுகின்றது.

ii உடலியக்க [illegible] சபங்களின் போது வெளியேற்றப்படுகின்ற காபனீரொட்சைட்,யூரியா போன்ற பல்வேறு கழிவுகளை அகற்றுகின்றது.

iii சமிபாட்டுத் தொகுதியில் அகத்துறுஞ்சப்பட்ட உணவுக் கூறுகளை உடற்கலங்களிற்குக் கொண்டு செல்கின்றது.

iv ஓமோன்கள். நொதியங்கள் போன்ற இரசாயனப் பதார்த்தங்களைத் தேவையான இடத்திற்குக் கொண்டு செல்கின்றது.

v உள்ளெடுக்கின்ற மருந்துப்பொருட்களைச் செல்ல வேண்டிய இடத்திற்கு அனுப்பி வைக்கின்றது.

vi உடற்கலங்களிற்குத் தேவையான நீரைக் கொண்டுசெல்கின்றது.

எனவேதான் குருதியானது குழாய்களினூடாகத் தொடர்ச்சியாகச் சுற்றியோடுகின்றது. குருதியில் உள்ள செங்குருதிக் கலங்கள் என்புமச்சையில் உருவாக்கப்பட்டு அவை 120 நாட்கள் வரை உயிர்வாழ்ந்து ஈரல், மண்ணீரல் போன்ற அமைப்புக்களில் அழிக்கப்படுகின்றது.

## இரத்த மாற்றீடு

பல்வேறு சந்தர்ப்பங்களில் எமது உடலிற்கு இரத்தம், அல்லது இரத்தக் கூறுகளின் மாற்றீடு தேவைப்படுகின்றது. அதாவது ஒரு வாழ வேண்டிய உயிரை வையத்துள் வாழ்வாங்கு வாழ இரத்தமாற்றீடு அவசியமாகிறது. இதனால் என்னவோ எமது சான்றோர்கள் " தானங்களுள் சிறந்த தானம் இரத்தானம்" என்றுரைத்துச் சென்றனர்.

## இரத்தமாற்றீடு செய்ய வேண்டிய சந்தர்ப்பங்கள்

i விபத்துக்கள், குண்டு வெடிப்புக்கள், சத்திர சிகிச்சைகளின் போது பெருமளவில் இரத்தம்வெளியேறிய சந்தர்ப்பங்களில்.

ii பெருமளவில் கருவுற்ற பெண்களில் கருச்சிதைவு, மகப்பேற்றுக்குப் பின் கட்டுப்படாத குருதிவெளியேற்றம் அறுவைச் சிகிச்சை மூலம் குழந்தை வெளியேற்றல்,

iii குருதிச்சோகை உள்ள நோயாளர்களில் கீமோபீலியா எனப்படுகின்ற குருதியுறையா நோய், டெங்கு எனப்படுகின்ற நோயாளிகளில் குருதிச சிறுதட்டுக்களின் எண்ணிக்கை சடுதியாகக் குறையும் போது,

iv குருதிப்புற்றுநோய், நாட்பட்ட சிறுநீரக செயலிழப்பு உள்ள நோயாளர்களில்.

இவ்வாறு பல்வேறு சந்தர்ப்பங்களில் உடனடியாக குருதியேற்றி குறித்த நோயாளியை காக்க வேண்டியேற்படுகின்றது. இவ்வாறு இரத்தமாற்றீடு செய்ய வேண்டியவர்களிற்குத் தேவையான இரத்தத்தை அவர்கள் சார்ந்த உறவினர்கள் மூலமோ அல்லது குருதிக் கொடையாளர்கள் மூலமாகவோ குறித்த வைத்தியசாலையின் இரத்த வங்கி பெற்றுக்கொள் கின்றது. அல்லது போனால் கள்ளச்சந்தை அல்லது தரகர் ஊடாக பெருந்தொகைப் பணத் தைக்கொடுத்து இரத்தத்தைப் பெற்றுக் கொள்கின்ற சம்பவங்களும் இன்றும் நடை பெற்றுக் கொண்டே இருக்கின்றன.

## இரத்ததானத்தின் அனுகூலங்கள்

" தர்மம் தலைகாக்கும் இரத்ததானம் உயிர்காக்கும் என்பது சான்றோர் வாக்கு.இதற்கு மேலே இதன் அனுகூலங்களைக் கூறமுடியாது"

i எமது குருதி வகையை அறிந்து கொள்ளலாம்

ii எமது உடலில் காணப்படுகின்ற சில நோய்களை அறிந்துகொள்ளலாம். உதாரணமாக "எயிட்ஸ்", மேகநோய்கள் எனப்படுகின்ற சிபி "சிளிலிஸ்","கொனே', ஈரல் அளற்சி நோய் "சிளிலிஸ்","கொனோரியா"

iii எமது குருதியின் ஈமோக் குளோபின் அளவை அறிந்து கொள்ளலாம்.

iv இழந்ததை ஈடுசெய்வதற்காக கலங்கள் பிரிந்து பெருகுவதால் என்புமச்சைகளின் சரியான தொழிற்பாட்டை உறுதிசெய்யலாம்.

## பிரதிகூலங்கள்

பிரதிகூலங்கள் என்று கூறுவதற்கு ஒன்றுமில்லை.

## தானம்செய்யக் கூடியவர்கள்

யாரும் எந் நேரத்திலும் இரத்தானம் செய்யலாம் அல்லது செய்ய முன்வரலாம். ஆனால் அவ்வாறு இரத்ததானம் செய்ய முன் வருபவர்கள் எல்லோரிடமிருந்தும் உடனடியாக இரத்தம் சேகரிப்பதற்கு பல்வேறு காரணிகள் கருத்தில் எடுக்கப்படும். அதாவது தேசியஇரத்த வங்கியால் விநியோகிக்கப்படுகின்ற படிவத்தில் உள்ள கேள்விகளுக்குக் கொடுக்கப்படுகின்ற விடைகளே குறித்த நபரில் இருந்து இரத்தம் எடுப்பதா? இல்லை? என்பதைத் தீர்மானிக்கும்

## இரத்ததானத்தின் பின்

ஒன்றும் செய்வதற்கில்லை ஒரு பெரிய "கப்" வெறும்தண்ணீர் குடித்துவிட்டு அன்று முழுவதும் சற்று ஓய்வு எடுத்தால் போதும் எமது சமூகத்தில் இருக்கின்ற சில மூடநம்பிக்கையால் எமது சொந்த உறவுகளிற்கே இரத்ததானம் செய்ய மனமில்லாத எத்தனையோ ஈனப்பிறவிகளைக் காண்கின்றோம்.

## பொதுவான சமுதாயக் கண்ணோட்டம்

இரத்ததானத்திற்குப்பின் உடற்பருமன் அதிகரித்தல், தான் அல்லது தனது மகன், மகள் உடலில் இருந்து ஏதோவொன்றை இழந்துவிட்டதாக எண்ணி நாளாந்தம் உள்ளெடுக்கும் உணவிற்கு மேலதிகமாக சத்துள்ள உணவை உட்கொள்வதாக எண்ணி அதிகம் சாப்பிடுவதால் ஏற்படுகின்ற பின்விளைவாகும்.

இரத்ததானம் செய்வதற்கும் உடல் நிறை அதிகரிப்பிற்கும், உள்ள பரமரகசியம் இதுவாகும்.

II.பாரிய உடல் நோய்கள் ஏற்படும் இதுவும் ஒரு மூட நம்பிக்கையே.

III.இருதயநோய்கள் ஏற்படும் என்பது இதுவும் அநாவசிய பயமேயன்றி இதில் எவ்வித உண்மையும் இல்லை.

நாட்பட்ட அல்லது வேறு சில உடல் நோய்கள் இல்லாத ஒரு சுகதேகி 3 மாதங்களிற்கு ஒரு தடவை இரத்ததானம் செய்யலாம் எவ்விதமான பாதிப்புக்களும் இல்லை எனவே வள்ளுவம் சொல்கின்றது " காலத்தாற் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தில் மாணப் பெரிது"

என்னால் தர்மகாரியம் ஒன்றும் செய்ய காசு சொத்து இல்லையே என்ற கவலை வேண்டாம். இரத்ததானம் ஒன்றே செய்யுங்கள், உங்களிற்கு இப்போதே வாகனத்தில் அதற்குரிய இடம் பதிவு செய்து வைக்கப்படும்.




*வைத்திய கலாநிதி*

**பா.யூ.டிரமேஸ் ஜெயக்குமார்,**

*செயலாளர் மருத்துவசங்கம், கிளிநொச்சி.*


---

# -வடமேல் மாகாணம் தவிர்ந்த-
# அனைத்து மாகாணசபைகளுக்குமான தேர்தல்களை ஒரே தினத்தில் நடத்த ஆராய்வு

(கொழும்பு)

வடமேல் மாகாணசபை தவிர்ந்த ஏனைய சகல மாகாண சபைகளுக்குமான தேர்தல் களையும் ஒரே நேரத்தில் நடத்துவதற்கு சனாதிபதி சகல அரசியல் கட்சிகளின் தலைவர்கள், செயலாளர்களுடனும் அடுத்த வாரம் கலந்துரையாடவுள்ளார்.

வடமேல் மாகாண சபைக்கான தேர்தல் இம் மாதம் 24ஆம் திகதி நடைபெறவுள்ளது என்று தீர்மானிக்கப்பட்டுள்ள வேளையில் மாகாண சபைக்கான தேர்தலையும் ஒரே தினத்தில் நடத்துவதற்காகவே அடுத்தவாரம் சனாதிபதி கட்சி சார்ந்தவர்களுடன் கலந்துரையாடத் தீர்மானம் செய்துள்ளார்.

மத்திய மாகாண சபையின் பதவிக்காலம் இம்மாதம் 26ஆம் திகதியும், வடமத்திய மாகாணம், ஊவா மாகாணம், சப்ரகமுவ மாகாணம் ஆகியவற்றின் பதவிக்காலம் அடுத்தடுத்த மாதத்திலும், தென்மாகாண சபையின் பதவிக்காலம் ஆகஸ்ட் மாதமும் முடிவடைகின்றன.

அதனால் தென்மாகாண சபையின் பதவிக் காலம்முடிவடைவதற்கு முன்னதாக அதனைக் கலைப்பது குறித்து அந்த மாகாண சபை முதலமைச்சருடன் சனாதிபதி அடுத்தவார முற்பகுதியில் கலந்துரையாட முடிவு செய்துள்ளார். ஒரே நாளில் மாகாண சபைத் தேர்தலை நடத்தும் முடிவைத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க வரவேற்றுள்ளார். ஏனெனில் கால விரயமும் செலவினமும் மட்டுப்படுத்தப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

---

# மின்சக்தி, பெற்றோலிய பாவனையாளருக்கு நிவாரணம்
## - புதிய அமைச்சர் உறுதிமொழி

(கொழும்பு)

மின்சக்தி மற்றும் பெற்றோலியப் பாவனையாளர்களுக்கு நிவாரணம் வழங்கப்படுமென மின்சக்தி எரிபொருள். துறை அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த உறுதிகூறியுள்ளார். கொழும்பில் அமைச்சு அலுவலகத்தில் நேற்றுக்காலை கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மக்களின் நாளாந்த வாழ்க்கையில் முக்கிய இடத்தைப்பெற்றுள்ள இவ் இரண்டு விடயங்கள் தொடர்பாக பூரண கவனம் செலுத்தப்படுமென அவர் மேலும் தெரிந்தார்..

---

# 8 தபால் சேவகர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கல்

பரந்தன் பிரதம தபாலகத்திலும்,அதன் கட்டுப்பாட்டு உபதபாலகங்களிலும் தற்காலிகமாக கடமையாற்றி வந்த தபால் சேவகர்கள் கடந்த காலங்களில் நிலவிய யுத்த நெருக்கடி காரணமாக இவர்களுக்கான நியமனங்கள் செய்யப்படாமல் தாமதப்பட்டு வந்தது தற்போது புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டபின்னர் தற்காலிகமாகக் கடமையாற்றி வந்த தபால் சேவகர்களை நிரந்தர நியமனம் செய்வதற்கு தபால் திணைக்கள உயர் அதிகாரிகள் மேற்கொண்ட துரித நடவடிக்கையின் மூலம் எட்டு தற்காலிக தபால் சேவகர்கள் நிரந்தர ஊழியர்களாகவும்,ஒரு காரியாலய சேவகர் உட்பட ஒன்பது பேர் நியமனம் பெற்றுள்ளனர்.

முரசுமோட்டை உபதபாலகத்தில் எஸ்.சிவலோகநாதன், எஸ்.சிவகுமார்,உருத்திரபுர உபதபாலகத்தில் கே.குணரத்தினம், வை.சந்திரலிங்கம்,கண்டாவளை உபதபாலகத்தில்.ம.சோமசேகரம்,பரந்தன் பிரதமதபாலகத்தில்.எஸ் தெய்வேந்திரம்,க.திருக்கேதீஸ்வரன், எஸ்.சிறீபதி, ஆ.தேவராசா ஆகிய ஒன்பது பேருக்கும் அண்மைக்காலம் தொடக்கம் கட்டம் கட்டமாக நியமனங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன என பரந்தன் தபாலதிபர் திரு.ந.திருச்செல்வம் தெரிவித்தார். (ப)

# இந்திய மீன்பிடிப் படகுகளின் நடமாட்டம் வடமராட்சிக் கடலில் குறைவடைந்தது!

## தாக்குதல் அச்சமே காரணம்

**வடமராட்சிக் கடற்பரப்பினுள் அத்துமீறிப் பிரவேசித்து மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீன் பிடிப்படகுகளது நடமாட்டம் பெருமளவில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக உள்ளூர் மீனவர்களால் தெரிவிக்கப்படுகின்றது.**

குறிப்பாக வடமராட்சி வடக்கு கடற்பரப்பில் அத்துமீறிப் பிரவேசித்து மீன் பிடியில் ஈடுபட்டிருந்த, இந்தியப் படகுகள் மீது, அண்மையில் இனந் தெரியாத குழுவொன்று தாக்குதலை நடத்தியிருந்தது. இதன் போது பெற்றோல் எரிகுண்டுகள் இந்தியப் படகுகள் மீது இக் குழுவினால் வீசப்பட்டதாகவும் சம்பவத்தில் சில இந்திய மீனவர்கள் காயமடைந்த நிலையில் படகுகளுடன் அவர்கள் தப்பிச் சென்றிருந்ததாகவும் உள்ளூர் மீனவர்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அண்மையில் இக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களால் தாக்கப்பட்டு உள்ளூர் மீனவர் ஒருவர் உயிரிழந்ததையடுத்து தாம் பழிவாங்கப்படலாமென்ற அச்சத்தாலும், அத்துமீறிப் பிரவேசிக்கும் இப்படகுகளை மேல் நீதிமன்று பறிமுதல் செய்யப் பணிப்புரை விடுத்தமையும், நடமாட்டம் குறைவடையக் காரணமெனவும் கூறப்படுகிறது. (27)

# வட-கிழக்கில் 10 நடுத்தர நீர்ப்பாசனக் குளங்கள் ஜப்பானிய நிதியுதவியுடன் புனரமைக்க ஏற்பாடு

போரினால் வடக்கு-கிழக்கில் பாதிக்கப்பட்ட 10 நடுத்தர நீர்ப்பாசனக் குளங்கள் 50கோடி ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளன.

ஜப்பானிய வங்கியினுதவியுடன் பீஸ்நிறுவனம் இந்தப் பாரிய வேலைத் திட்டத்தை திட்டமிட்டுள்ளது.இத்திட்டத்தின் மூலம் வடகிழக்கிலுள்ள 07 மாவட்டங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 491 குடும்பங்கள் நன்மையடைய வாய்ப்பு உண்டு.

அந்தவகையில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார். மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் பெரிய நடுத்தர நீர்ப்பாசனக்குளங்கள் 10 இனம் காணப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆயிரத்து 358 ஹெக்ரேயர் காணிகளுக்கு நீர்ப்பாசனம் வழங்கும் அக்கராயன் குளம் 10 கோடி 30 இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

அதேபோல் முல்லைத்தீவு மாவட்டத்தில் 344 ஹெக்ரேயர் காணிகளுக்கு நீர்வழங்கும் தென்னியன் குளம் 2கோடி 60 இலட்சரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

இதேபோல் வவுனியா மாவட்டத்தில் 243 ஹெக்ரேயர் காணிகளுக்கு நீர்வழங்கும் செம்மடுக்குளம் 1கோடி 80 இலட்ச ரூபாவிலும் 121ஹெக்ரேயர் காணிகளுக்கு நீர்வழங்கும் மல்லிகைக்குளம் 1கோடி ரூபா செலவிலும் புனரமைக்கப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தை நீர் முகாமைத்துவ அமைச்சு தயாரித்து வழங்கியுள்ளது.

# மதுபோதையில் வாகனம் செலுத்திய 14 ஓட்டுனர்களுக்குத் தண்டனை

(அலுவலக செய்தியாளர்)

மது போதையில் வீதிகளில் பாரவூர்திகள் மற்றும் உந்துருளி களை செலுத்தியவர்கள் தமிழீழக் காவல் துறை வாகனப்போக்கு வரத்துப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட் படுத்தப் பெற்றதுடன் அவர்களிடம் குற்றப்பணமும் அறவிடப்பட்டது.

மேற்படி நடவடிக்கைகள் திங்கட்கிழமைகிளிநொச்சி நகர் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் காவல் துறையினரால் மேற்கொள்ளப் பெற்றுள்ளது.

இந் நடவடிக்கையின் போது இரு பாரஊர்திச்சாரதிகள் 12 உந்துருளி ஓட்டுனர்கள் மதுபோதையில் வாகனங்களினை செலுத்தியுள்ளமை கண்டுபிடிக்கப்பெற்று மது போதையில்வாகனங்களை செலுத்திய குற்றத்திற்கென 14 வாகன ஓட்டுனர்களும் குற்றப்பணம் செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# சுலுசுகள் சேதமடைந்துள்ளமையால் வீதிகள்மோசமாகப் பாதிப்பு

வட்டக்கச்சிப் பகுதியிலும் வட்டக்கச்சியிலிருந்து கிளிநொச்சி செல்லும் பிரதான வீதியிலும் சில சுலுசுகள் சேதமடைந்து காணப்படுகின்றன. அதனால் வீதிகள் மண்ணரிப்புக் குள்ளாகிக் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

இரணைமடுக்குளத்திலிருந்து நீர் வழங்கிவரும்வாய்க்கால்களின்சில சுலுசுகள் சேதமடைந்து காணப்படுகின்றது. இதனால் வீதிகள் மண் அரிப்புக்குள்ளாகி உள்ளது இன்னும் சிறிது காலத்தில் போக்குவரத்திற்கு பயன்படுத்த முடியாத நிலையையும் வீதி அரிப்புக்குள்ளாகி சேதமடைந்து அழியும் நிலையையும் அவதானிக்க முடிகின்றது.

இதனால் விபத்துக்களும் ஏற்பட ஏதுவாக உள்ளதால் பார ஊர்தி வாகனங்கள் அ[illegible] செல்ல வேண்டிய நிலை[illegible]ளது. (12)

# வீட்டு மானியக் கொடுப்பனவில் மோசடி இடம் பெற்றதாக முறைப்பாடு

யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்து புத்தளம் ரத்மல்யாயவில் வாழ்ந்து வரும் அகதிகளுக்கு வழங்கப்பட வேண்டிய வீட்டு மானியக் கொடுப்பனவு நிதியில் மோசடி செய்யப்பட்டுள்ளதாக பிரதேச மக்களகுற்றம் சுமத்தியுள்ளனர். இதுதொடர்பில் அவர்கள் சனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளனர்.

புத்தளம் பிரதேச செயலக பிரதேசத்தில் அமைந்துள்ள ஹிஜ்ரத்புர கிராமத்தில் சுமார் 160 இடம்பெயர்ந்த குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இவற்றில் 30 குடும்பங்களுக்கு காணிகளை பெற்றுக் கொள்வதற்காக தலா 25000. ரூபா பெறுமதியான காசோலைகள் வழங்கப்பட்டன. எனினும் கடந்த பொதுத் தேர்தலின் பின்னர் அவை குறிப்பிட்ட மக்களிடமிருந்து மீளப்பெறப்பட்டுள்ளதாகக்குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. எனவே இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு இடம் பெயர்ந்தவர்கள் சனாதிபதியைக்கேட்டுள்ளனர். (32)

# அன்னைபூபதி நினைவுநாட்கள் மன்னாரில் எழுச்சியுடன் அனுஷ்டிப்பு

(மன்னார்)

தியாகி அன்னைபூபதியின் 16வது ஆண்டு நினைவு நிகழ்வை யொட்டி மன்னார் நகரம் எழுச்சிக்கோலம் பூண்டுள்ளது.

நகரின் எல்லா இடங்களிலும் சிவப்பு, மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டுள்ளன. முக்கிய இடங்களில் தியாகிஅன்னை பூபதியின் திருவுருவப்படம் விசேடமாக அமைக்கப்பட்ட மேடையில் வைக்கப்பட்டு மாலை அணிவிக்கப்பட்டு விளக்கேற்றப்பட்டு மக்கள் நினைவுகூருகின்றனர்.

மேலும் 19ஆம் திகதி திங்கட்கிழமை ஞானஸ்தான விளையாட்டு மைதானத்தில் மாலை 4.00 மணிக்கு இறுதி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது. அன்றையதினம் சகல கிராமங்களிலும் உண்ணாவிரத நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (மி)

# யாழ்.இல் குடிநீர்த் தட்டுப்பாடுள்ள பகுதிகளுக்கு நீர் விநியோகம்

## அமைப்புக்கள் சில நிதியுதவி

யாழ்.குடாநாட்டில் குடிநீர் தட்டுப்பாடு நிலவும் பகுதிகளுக்கு உலக வங்கி மற்றும் உதவும் நிதிநிறுவனங்களுடைய நிதி உதவியுடன் நீர்விநியோகங்கள் செய்யப்படவுள்ளன.

அண்மைக்காலமாக யாழ்.குடாநாட்டில் நிலவிவரும் வரட்சிகாரணமாக தீவகம், தென்மராட்சிவடமராட்சி போன்ற பகுதிகளில் குடிநீர்த் தட்டுப்பாடு நிலவிவருகிறது. இதனால் அப்பகுதிகளைச்சேர்ந்த மக்கள் பலத்த இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.

இதனைக்கருத்திற்கொண்டே மேற்படி உதவும் நிதிநிறுவனங்களுடன்வரட்சியால் கடுமையாகப் பாதிக்கப்பட்டபகுதிகளுக்கு பவுசர்கள் மூலமாக அல்லது குழாய்கள் மூலமாக நீர்வழங்கும் திட்டம் ஒன்றை யாழ். செயலகம் அமுல் படுத்தவுள்ளது. (33)

# பொது மயானத்தை சீரமைக்கக் கோரல்

வட்டக்கச்சி மம்மில் பொது மயானம் பற்றைக்காடாய் காட்சியளிக்கிறது இதனால் இறுதிக் கிரியைகளை நடத்தப் பெரும் நெருக்கடி எதிர் நோக்கப்படுகிறது.

இந்தப் பொது மயானம் நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாது பற்றைக் காடாய்க் காட்சி தருகிறது. அ[illegible]தோடு மயானப் பகுதியில் பொது மண்டபம் ஒன்று அமைத்துத் தருவதாக உறுதியளிக்கப் பட்டிருந்தும் அதற்கான எத்தகைய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டதாகத் தெரியவில்லை. (12)

# மூன்று பொலிஸ் நிலையங்கள் நுவரெலியாவில் அமைப்பு

(கொழும்பு)

நுவரெலியாவில் 3பொலிஸ் நிலையங்கள் புதிதாக அமைக்கப்பட வுள்ளன. இதனை பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா தெரிவித்துள்ளார். நுவரெலியாவில் கொத்மலை டய கம, தெரிபஹா ஆகிய இடங்களிலேயே பொலிஸ் நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# குருநாகல் பிரதேசத்தில் டெங்கு நோய் அபாயம்

(கொழும்பு)

குருநாகல் பிரதேசத்தில் மீண்டும் டெங்குநோய் அபாயம் ஏற்பட்டுள்ளது.நீண்ட வரட்சிக்கு பின்னர் இப்பகுதியில் மழை பெய்து வருவதால் இப்பகுதியில் டெங்கு நோய் பரவி வருவதாக நோய்த்தடுப்பு நிபுணரான மருத்துவர் சியாமா சேனரத்ன கூறியுள்ளார். இதுவரையில் 37 பேர் இந்நோயினால் [illegible]டிக்கப்பட்டுள் ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.




# தென் இந்திய நடனக் கலைஞர்களின்



## நடன சங்கமமும்,நடனப்பயிற்சியும்

**(2004 மே 4முதல் 10 வரை)**

பரதநாட்டியம்,குச்சுப்புடி,கதகளி ஆகிய சென்னையைத் தளமாகக்கொண்ட உலகப்புகழ்பெற்ற தென்இந்திய சாஸ்திரிய நடனங்களை ஏழு நாள்களுக்கு யாழ்.மண்ணில் நடத்தவுள்ளோம்.

**(04.05.2004 - 10.05.2004) வரை**

மேற்படி நிகழ்ச்சியானது, நடனப்பாரம்பரியத்தில் உருவாகிய ஆசிரியர்கள், ஆசான்களினால் நடத்தப்படும் நடனத்தை முறையாகப்பயின்றவர்களாகவும் அந்தந்த நடன வடிவங்கள் சார்ந்த கலாசேத்ரா,வழுவூர், பந்தணை நல்லூர், கலாமண்டலம், வேம்பட்டி குச்சுப்புடி பயிற்சி நிலையம் முதலியபள்ளிகளூடாகக் கற்றுத்தேர்ந்த விற்பன்னர்களாகவும், சிறந்த ஆற்றுகையாளர்களாகவும் உள்ள உலகப்புகழ் பெற்ற

**அலமேலுவும்,**
**உஷா வசந்தகுமார்,**
**உன்னிக்கிருஸ்ணன் -பரத நாட்டியமும்**
**ராஜேஸ், லக்ஸ்மி பிரியா - குச்சுப்புடி**
**ஸ்ரீ பாலசுப்பிரமணியம் -கதகளி**

ஆகியோருடன் அவர்களது நடனக்குழுவினரும் இணைந்து இந்த நடன நிகழ்ச்சியையும் நடனப்பயிற்சியையும்வழங்கவுள்ளார்கள்.

இந்த ஏழுநாள் நடனப்பயிற்சியில் (பரதநாட்டியம், குச்சுப்புடி, கதகளி) சேரவிரும்பும் மாணவர்கள் எதிர்வரும் 20.04.2004 செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் பதிவுசெய்யவும்.

பதிவு செய்யவேண்டிய முகவரி: **ரி.கே.ரூறிஸ்ற் இன்**
பலாலி றோட், கந்தர்மடம் சந்தி(அரசடி வீதி), யாழ்ப்பாணம்.
தொ.பே: 077 6143541, 021 222 5680

(சி-9534)



**சிந்தனைக்கு**

மக்களின் துன்பங்களில் நாம் பங்கெடுத்துக்கொள்ளும் போதுதான் மக்கள் எம்முடன் இணைந்து கொள்வார்கள்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 15-04-2004

# யாரிடம் கேட்கின்றனர்!

"நிரந்தர சமாதானம்,பொருளாதார அபிவிருத்திக்கு அரசியல் ஸ்திரநிலை அவசியமானது" என்ற சனாதிபதி சந்திரிகாவின் கூற்றுக்கள் மக்களுக்கு ஒன்றும் புதியதும் அல்ல. தெரியாததும் அல்ல. ஆனால், நாட்டில் ஸ்திரமான ஆட்சி உருவாகாமல் போனமைக்கும், சமாதானமும், பொருளாதார அபிவிருத்தி ஏற்படாமல் போயுள்ளமைக்கும் அரசியல் வாதிகள் குறிப்பாக ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியவர்களைத் தவிர் வேறுயார் பொறுப்பேற்க முடியும்?

நாட்டின் அபிவிருத்திக்குச் சமாதானமும், அரசின் ஸ்திரமான நிலையும் அவசியமானது என்பது ஆட்சிக்கு வந்த பின்னர் ஒவ்வொரு ஆட்சியாளரும் தெரிவிக்கும் அபிப்பிராயமாகும். இதில் சனாதிபதி சந்திரிகாவோ அன்றி ரணில் விக்கிரமசிங்கவோ வேறுபட்டவர்களாக இல்லை. ஆனால், அதற்காக ஸ்திரமான அரசை உருவாக்குவதற்கு மக்கள் வாய்ப்பளிக்க வில்லையெனக் கூறிவிட முடியாது.

1994இல் ,சனாதிபதி சந்திரிகா அமைதியைக்கொண்டுவருவதாகவும், பொருளாதார அபிவிருத்திக்கு வழி சமைப்பதாகவும் வாக்குறுதி அளித்தபோது, மக்கள் அவருக்குத் தெளிவான அங்கீகாரத்தை அளித்தனர். அதிலும் குறிப்பாக சனாதிபதித் தேர்தலில் வரலாறு காணாதவகையில் 60 வீதத்திற்கும் மேற்பட்ட வாக்குகள் பெற்று வெற்றிபெற உதவினர்.

இதன் விளைவாக 1994இல் இருந்து அந்த முழுப் பதவிக்காலமும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசாங்கம் ஸ்திரமான நிலையிலேயே இருந்தது. ஆனால் ஆட்சியைக் கைப்பற்றியதும் சனாதிபதி சந்திரிகா அமைதிக்கோ,பொருளாதார அபிவிருத்திக்கோ வழிவகுக்கக் கூடிய மார்க்கத்தைத் தேடவில்லை. மாறாக மேலும் பொருளாதாரச் சீரழிவையும், அழிவையும் கொடுக்கக் கூடிய வழிமுறைகளையே தேர்ந்தெடுத்திருந்தார்.

இதற்குப் பின்னராக 2001 ஆம்ஆண்டில் இடம்பெற்ற பொதுத் தேர்தலின் பிரகாரம் ஐ.தே.முன்னணி அரசாங்கம் பாராளுமன்றத்தில் தெளிவான பெரும்பான்மைகளைப்பெற்றிருந்தது. ஆனால் இவ் அரசாங்கத்தை உறுதியான வகையில் செயற்பட நிறைவேற்று அதிகாரம் கொண்டிருந்த சனாதிபதி சந்திரிகா அனுமதிக்கவில்லை. மாறாக பாராளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்டிருந்த அதாவது ஸ்திரமான நிலையிலிருந்த அரசாங்கத்தைக் கலைத்துவிடவே முயற்சிகளை மேற்கொண்டிருந்தார்.

இந்தவகையில் அதிகாரத்தில் இருந்தவர்கள் மக்களால் தெளிவாக வழங்கப்பட்ட ஆணைகளை ஏற்று செயற்பட்டதாக இல்லை. தமது அதிகார அபிலாசைகள், எதிர்காலத் தேவைகள் என்பன குறித்தே கவலை கொண்டனர். அதற்கு ஏற்பவே தமதுநகர்வுகளை மேற்கொண்டனர். இந்தவகையில் சனாதிபதி சந்திரிகாவோ தானும் செய்யாது மற்றவர்களையும் செய்யவிடாது முட்டுக்கட்டைபோட்டார் என்றே சொல்லமுடியும்.

இந்நிலையில் தற்பொழுது ஸ்திரமான ஆட்சி குறித்து மீண்டும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பேசத் தொடங்கியுள்ளார். ஆனால் தற்பொழுது ஸ்திரமான ஆட்சி ஒன்றை அமைக்க முடியாமல் இருப்பதற்கும் பிரதான காரணம் யார்?ஐ.தே.கட்சியா? அன்றிச் சிறுபான்மைக் இனக் கட்சிகளா?

கடந்த தேர்தலில் ஆட்சியமைக்க அனுமதி தாருங்கள் என ஜே.வி.பியும் – சுதந்திரக்கட்சியும் கூட்டாக சிங்கள மக்களிடம் கோரின. மக்களும் இக்கூட்டணிக்கு அரசாங்கத்தை அமைக்கும் வாய்ப்பைப் கொடுக்கும் வகையிலேயே வாக்களித்தனர். ஆனால் தற்பொழுது அரசாங்கத்தை அமைக்கும் முன்பே இவ்விருகட்சிகளுக்கும் இடையில் பெரும் இழுபறிநிலை ஏற் பட்டுள்ளது.

பிரதமராக மகிந்தராஜபக்ஷ நியமிக்கப்பட்டதில் தொடங்கி அமைச்சரவை நியமனம் வரையில், இத்தகையதொரு நிலையே காணப்படுகின்றது. மக்களிடம் ஆட்சியமைக்க அனுமதிகோரியவர்கள் இன்று அதிகாரத்திற்காகப்பிரிந்துபோய் நிற்கின்றனர். நாட்டில் ஒரு நிலையான, ஸ்திரமான அரசாங்கத்தை உருவாக்க முடியாத நிலையைத் தோற்றுவித்துள்ளனர்.

இந்தநிலையில் ஸ்திரமான அரசாங்கம் அமையாமல் போனமைக்குப் பொறுப்பேற்க வேண்டியவர்களாக இவ் ஆட்சியாளர்களே இருக்கையில், ஸ்திரமான அரசு தேவை என இவர்கள் யாரிடம் கேட்கின்றனர்? அன்றி யாருக்குக் கூறுகின்றனர்?

மக்களின்ஆசையை மதித்து ஸ்திரமானதொரு அரசை உருவாக்காமலும், உருவாகும் அரசை செயற்பட முடியாமலும் முட்டுக்கட்டை போட்டுவிட்டு ஸ்திரமான அரசுபற்றிப் பேசுவது மக்களை ஏமாற்றும் நடவடிக்கைகளே ஒழிய நேர்மையான அரசியல் வழிமுறையாக மாட்டாது.

# மேற்குலகிற்கான இராஜதந்திரிகளை அகற்றிவிட அரசாங்கம் நடவடிக்கை!

## -வெளிநாட்டு அமைச்சு தகவல்

(கொழும்பு)

ஐக்கியதேசிய முன்னணியின் கடந்த ஆட்சியின் போது மேற்கு நாடுகளுக்குஇராஜதந்திரிகளாக நியமனம் பெற்ற பலரை அப்பதவிகளில் இருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் மேற்கொண்டு வருவதாகக் கூறப்படுகின்றது.

இதனை கொழும்பிலுள்ள வெளிநாட்டமைச்சு வட்டாரம் தெரிவித்துள்ளது .

புதிய வெளிவிவகார அமைச்சர் அது விடயத்தில் கடும் போக்குக் கொள்கையினையே கடைப் பிடிப்பதாகவும் வெளிநாட்டமைச்சு கூறியுள்ளது. அதே நேரம், தமது பதவிகளைத்தக்க வைத்துக் கொள்வதற்காக இலங்கைக்கான வெளிநாட்டு இராஜதந்திரிகள் பலர் புதிய வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருடனும் அவரது நெருங்கிய பிரமுகர்களுடனும் தொடர்புகொண்டு வருவதாகத் தெரிய வந்துள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசினால் நியமிக்கப்பட்ட வெளிநாட்டு இராஜதந்திரிகள் பலரும் பக்கச் சார்பான செயற்பாடுகளில் கடந்த காலத்தில் ஈடுபட்டதன் காரணமாகவே இவ்வாறு பதவி நீக்கவுள்ளதாகச் சுதந்திர முன்னணி அரசு கூறியுள்ளது.

# அரச நிதியை கையாடியோரைக் கண்டறிய சிங்கப்பூர் புலனாய்வாளர் உதவி கோரல்!

## - நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவிப்பு

(கொழும்பு)

கோடிக்கணக்கான ரூபா நிதியை ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சிக் காலத்தில் பலர் திருடி இருக்கின்றார்கள். இவர்களின் விபரங்கள் கிடைத்துள்ளன. அரச நிதியை கொள்ளையடித்தோரைப் பற்றி நன்கு விசாரித்து அறிவதற்கு சிங்கப்பூர் புலனாய்வு அதிகாரிகளின் உதவி. நாடப்படவுள்ளது.

இவ்வாறு நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம கண்டியில் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் இந்த நாட்டின் பெருந்தொகையான அபிவிருத்திநிதியை சூறையாடியவர்களின் விபரங்களையும், அசாதாரண முறையில் கடன் வாங்கியோரையும் இனம் கண்டு அவர்கள் பற்றிய முறைப்பாடுகளைக் கொண்ட கோவைகளைப் பரிசீலனை செய்யவுள்ளோம்.

திருட்டுக்களைப் புரிந்தவர்களின் விபரங்களைக் கண்டுபிடிக்க,சிங்கப்பூர் நாட்டின் வங்கி அதிகாரிகளைக் கொண்ட புலன் விசாரணைப் பிரிவின் உதவியும் பெறப்படவுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

# வடக்கையும் தெற்கையும் இணைக்க விரைவில் அதிவேக நெடுஞ்சாலை!

## -சிறிலங்காப் பிரதமர் கூறுகின்றார்

(கொழும்பு)

வடக்கையும்தெற்கையும் இணைக்கும் வகையிலான அதிவேக நெடுஞ்சாலை ஒன்றை அமைப்பது தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகவும், வடக்கு தெற்கிலுள்ள மக்கள் தமது போக்குவரத்துக்களை சுதந்திரமாக மேற கொள்ளவேண்டும் என்பதற்காகவுமே இந்த நெடுஞ்சாலை அமைக்கும் திட்டம் உருவாக்கப்படவுள்ளது என்று சிறிலங்கா பிரதமரும் போக்குவரத்து அமைச்சருமான மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

அனைத்து இன மக்களுக கிடையேயும் சமத்துவமும் சமாதானமும் மேலோங்கவே இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது என்றும் இந்த நெடுஞ்சாலை அமைப்பது தொடர்பாக நிபுணர்கள் குழு இதுபற்றி ஆராய்வதற்கு நியமிக்கப்படவுள்ளது என்றும் கூறியபிரதமர், இலங்கையில் நெடுஞ்சாலைகள் தொடர்பான முகாமைத்துவ முறை ஒன்றையும் புதிதாக ஆரம்பிக்கவுள்ளதாகவும், இதற்காக சகல அதிகாரங்களும் கொண்ட சபை ஒன்றை ஆரம்பிக்கவுள்ளதாகவும், இதற்கான விசேட பிரேரணை ஒன்று தயாரிக்கப்படவுள்ளது என்றும் கூறியுள்ளார்.

# அடிப்படை மனித உரிமையை மீறிய 30 பொலிசார் மீது நடவடிக்கை

## -உயர் நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

2003 ஆம்ஆண்டு அடிப்படை மனித உரிமை மீறல்கள் தொடர்பாக 30 பொலிசாருக்கு எதிராகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. .. உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி இவ்கள் குற்றவாளிகளென்று கூறப பட்டுள்ளது.

இவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்குமாறு உயர் நீதிமன்றம் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுக்கும் பொலிஸ்மா அதிபருக்கும் பணிப்புரை விடுத்துள்ளது.

அத்துடன் குற்றம் சுமத்தப்பட்டுள்ள பொலிசாருக்கு எதிராக குற்றவியல் சித்திரவதை சட்டத்தின் கீழ் வழக்குத்தாக்கல் செய்ய முடியும் என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

சட்டவிரோதகைது ,தடுத்து வைத்தலின் போது சித்தி ரவதை என்பன போன்ற குற்றங்கள் இவர்கள் புரிந்துள்ளதாக நிருபிக்கப்பட்டுள்ளது.

இந்த 30 பேரினுள் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரும் அடங்குகின்றார்.

# பாராளுமன்ற உறுப்பினர்களின் நன்மை கருதி கருமபீடம்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களின் வசதி கருதி இன்றும்,16,17, ஆம் திகதிகளிலும் முற்பகல் 10 மணிமுதல் 3.30 மணிவரை தகவல் கருமப்பீடமொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தேவையான தகவல்கள் ஆவணங்களை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதால், சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் சமுகமளிக்குமாறு பாராளுமன்ற செயலாளர் நாயகம் கேட்டுக் கொண்டுள்ளார்.

# சிம்பாவ்வே தேசிய கிரிக்கெட் அணிக்குள் சர்ச்சை 13 வீரர்களும் விலகுவதாக அச்சுறுத்தல்

சிம்பாவ்வே தேசிய கிரிக்கெட் அணியிலிருந்து அதன் வீரர்கள் விலகிக் கொள்ளவுள்ளதாக அச்சுறுத்தல் விடுத்துள்ளனர். இதனால் சிம்பாவ்வே கிரிக்கெட் அணி பெரும் சர்ச்சைக்குள்ளாகியுள்ளது.

சிம்பாவ்வே அணிவீரர்கள் தமது முடிவை முன்னெடுப்பார்களேயானால் பெரும் சிக்கலுக்கு உள்ளாகும்என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

சிம்பாவ்வே கிரிக்கெட் ஒன்றிய தலைவருடனான பேச்சுவார்த்தைகளையடுத்து 13 வீரர்களும் விலகிக் கொள்ளலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. தேசிய தெரிவுக்குழுவின் அங்கத்தவர் நியமனங்கள் பற்றி கேள்வி எழுப்பியதில் இருந்து சிம்பாவ்வே கிரிக்கெட் அணியின் தலைவர் பதவியிலிருந்து ஹித் ஸ்ட்ரீக் விலகிக் கொண்டதாலேயே இந்தப் பிணக்கு ஏற்பட்டுள்ளது.

உயாமட்டத்தில் கிரிகெட் போட்டிகளில் விளையாடியவர்களே தெரிவுக்குழுவில் இடம்பெற வேண்டுமென்று தெரிவித்திருந்த ஹித் ஸ்ட்ரீக் தனது பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் வரை அணிக்கு மீளத் திரும்புவது இல்லை என்றுகூறியுள்ளார்.

## சிம்பாவ்வே பிரச்சினையில் தலையிட ஐ.சி.சி.மறுப்பு

தற்போது சிம்பாவ்வே கிரிக்கெட்டில் ஏற்பட்டுள்ள சூழ்நிலையை அடுத்து நிச்சயமற்ற நிலை காணப்படுகின்றது. இந்தப்பிரச்சினையில் தலையிடப் போவதில்லை என்று சர்வதேச கிரிக்கெட் பேரவை கூறியுள்ளது.

சிம்பாவ்வே கிரிக்கெட் அணி வீரர்கள் விளையாடுவதற்கு மேற்கொண்டுள்ள தாக்கம் தமது பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு காணப்பட வேண்டுமெனவும் வீரர்களது வழக்கறிஞர் கூறியுள்ளார் .

இதேவேளை சிம்பாவ்வே சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள சிறிலங்கா அணிக்கும் சிம்பாவ்வே அணிக்குமிடையிலான முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# திருடர்கள் அதிகரித்து செல்வதால் குடாநாட்டில் மக்களிடையே அச்சம்!

## பொலிசார் தொடர்ந்து பாராமுகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் அண்மைக் காலமாக திருட்டுச்சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இதனால் மக்கள் மத்தியில் அச்சம் தோன்றியுள்ளது.

வீடுகளுள் புகுந்து கொள்ளையடித்தல் வழிப்பறி துப்பாக்கி காட்டி மிரட்டி பணப்பறிப்பு எனப்பல்வேறு ரகங்களிலும் இத்திருட்டுக்கள் இடம் பெறுகின்றன. இவற்றில் ஈ.பி.டி.பியினர் போன்ற தேசவிரோதிகளும் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் மக்கள் மத்தியில் அச்சம் தோன்றியுள்ளது. இவ்வாறான கொள்ளையர்களை மடக்கிப்பிடிக்கவோ அல்லது அவர்களது செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தவோ பொலிசார் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளாது அசமந்தப்போக்கை காட்டி வருகின்றமையே இவ்வாறாக திருட்டுச்சம்பவங்கள் இடம்பெறுகின்றமைக்கு காரணம் எனப்பலராலும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது. (33)

# வெளிவாரி மாணவர்களுக்கான கற்கைநெறி வழிகாட்டல்

2001.2002 கல்வியாண்டு வெளிவாரி மாணவர்களுக்கான பட்டப்படிப்பு கற்கை நெறி தொடர்பான வழிகாட்டல் நிகழ்வு ஒன்று வெகுவிரைவில் நடாத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்நிகழ்வுமேற்படி கல்வியாண்டுக்கான பட்டப்படிப்பைத் தொடரும் மாணவர்களுக்கு மிகவும் அவசியமானதும், பயனுள்ளதாகவும் அமையக்கூடியதாகையால் பதிவினை மேற்கொண்ட அனைவரும் கலந்து கொள்ளவேண்டும்என்று எதிர்பார்கப்படுகின்றது.

நிகழ்வில் பங்குபற்றும் மாணவர்கள்அனைவரும் உதவிப்பதிவாளர் வெளிவாரிப் பதிவுகள்பரீட்சைகள் அலகு.யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நேரடியாக தொடர்பு கொண்டு தகவல்களை பெற்றுக்கொள்வதுடன் நூறுரூபாவை யாழ்ப்பாண பல்கலைக் கழக மக்கள்வங்கிக் கிளை யில்செலுத்தி உரிய பற்றுச்சீட்டை வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் சமர்ப்பித்தல் வேண்டும் எனப் பதிவாளர் கேட்டுள்ளனர்.

# கைதடிச் சந்தியை அண்மித்து படையினரின் புதிய காவலரண்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கைதடிச்சந்தியை அண்மித்த பகுதிகளில் படையினர் மேலும் சில புதியகாவலரண்களை நிறுவியுள்ளனர். மேற்படி பகுதிகளில் ஏற்கனவே ஏராளமான காவல் அரண்களும், மினி முகாம்களும், படைமுகாம்களும் அமைந்துள்ளன. இவை அப்பகுதி மக்களின் இயல்பு வாழ்விற்கு பெரும் இடர்பாடுகளை உருவாக்கி வருகின்ன.

இந் நிலையில் படையினர் மேலும் அப்பகுதிகளில் புதிய காவல் அரண்களைஅமைத்து வருகின்றமை இயல்பு வாழ்விற்கு பெரும் அச்சுறுத்தலாகவே அமைவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (33)

# மருத்துவர்கள் நியமிக்கப்படாமையால் மூடப்பட்ட மாவட்ட வைத்தியசாலையைத் திறக்க வற்புறுத்து

## - சுகாதார அமைச்சுக்கு அவசர கடிதம்

மருத்துவர்கள் இல்லாததால் ஏப்ரல் 11 தொடக்கம் மூடப்பட்டுள்ள தம்பலகமம் பிரதேச மாவட்ட வைத்தியசாலை மருத்துவர்களை நியமித்து உடனடியாகத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வாவை திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் கோரியுள்ளார்.

அமைச்சருக்கு பக்ஸ் மூலம் அனுப்பியுள்ள அவசரக் கடிதத்தில் துரைரெட்ணசிங்கம் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

"தம்பலகமம் பிரதேச செயலர் பிரிவு 12 கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்டது.49 கிராமங்களை உள்ளடக்கியது. சுமார் 30 ஆயிரம் மக்கள் இப்பிரிவில் வாழ்கின்றார்கள். மக்கள் அனைவரும் தம்பலகாமம் மாவட்ட வைத்தியசாலையைத் தான் நம்பியுள்ளனர்.

தம்பலகமம் வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவுக்கு தினமும் 100 தொடக்கம் 150 நோயாளர்கள் சிகிச்சைக்காக செல்கின்றனர். வைத்தியசாலையில் நான்கு வார்ட்டுகள், உள்ளன. பிரசவ வார்ட், குழந்தைகள் வார்ட் உள்ளன. இவ்வளவு காலமும் இரண்டு மருத்துவர்கள் இவ்வைத்தியசாலையில் பணி புரிந்து வந்தனர். இவர்களில் ஒருவர் பெப்ரவரி 27 தொடக்கம் பதில் நியமனம் செய்யப்படாது வெளிமாவட்டத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். இன்னொரு பெண் டாக்டர் தான் பின்னர் பணிபுரிந்த வைத்திய சாலையை முழுமையாக நிர்வகித்து வந்தார். அவரும் லீவில் சென்றுள்ளார். அவர் திரும்பும் வரை பதில் மருத்துவர் ஒருவரை நிர்வாகம் நியமிக்கவில்லை. அதன் காரணமாக ஏப்ரல் 11 தொடக்கம் தம்பலகமம் வைத்தியசாலை மூடப்பட்டுள்ளது.

இதனால், தம்பலகாமம் பிரதேச மக்கள் வைத்திய வசதிகள் இன்றி சிரமத்துக்குள்ளாகியுள்ளனர். உடனடியாக மருத்துவர் ஒருவரை நியமித்து வைத்தியசாலையைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுங்கள்" இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் துரைரெட்ணசிங்கம் சுகாதார அமைச்சரைக் கேட்டுள்ளார். (25)

# ஜே.வி.பி.யை சேர்ந்த அமைச்சர்கள் இன்றோ நாளையோ பதவி ஏற்பார்

## -சு.க-ஜே.வி.பி.பேச்சில் இணக்கம்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் பலமான அணியாக இருக்கும் மக்கள் விடுதலை முன்னணியை சேர்ந்த "அமைச்சர்கள் இன்று அல்லது நாளை பதவிப் பிமாணம் செய்துகொள்வார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் பதவிப்பிரமாணங்களை ஏற்றுக்கொண்டுள்ள நிலையில் ஐக்கிய மக்கள்சுதந்திர முன்னணியின் அமைச்சரவையை அமைப்பதில் ஏற்பட்டுள்ள சிக்கல் குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுநேற்று மக்கள் விடுதலை முன்னணியுடன் கூடிஆராய்ந்தன. அடுத்து ஓர் இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது. இதன்போது ஜே.வி.பி.யினால் கோரப்பட்ட மகாவலி, அபிவிருத்தி அமைச்சு. திரைப்படக் கூட்டுத்தாபனம் கலாச்சார அமைச்சிக்குள் வருவதான வலியுறுத்தல் என்பவற்றில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதேவேளை அரசியல் அமைப்பை மாற்றுவதற்கான நடவடிக்கையை மாற்றுவதற்கு ஆர்வம்காட்டிவரும் சனாதிபதி அதுவரையாவது ஜே.வி.பி. யுடன் உடன்பாடு கொண்டிருப்பதற்கு முயல்வதாக தெரிவிக்கப்படுகிறது. (32)

# புதிய அரசின் அமைச்சர்கள் சிலர் தமது கடமைகளை பொறுப்பேற்பு

(கொழும்பு)

சிறிலங்காவில் புதிதாக அரசமைத்துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் அமைச்சர்கள் சிலர் நேற்று உத்தியோகபூர்வமாக தமது கடமைகளைப் பொறுப்பேற்றனர்.

நிதி அமைச்சர் சரத்அமுனுகம, மின்சக்தி எரிபொருள் துறை அமைச்சர் சுசில் பிறேம்ஜெயந்த, ஊடகத்துறை அமைச்சர் றெஜினோல்ட் குரே வீடமைப்பு கிழக்கு கல்வி அபிவிருத்தி நீர்ப்பாசன அபிவிருத்தி அமைச்சர் பேரியல் அஸ்ரப், சுற்றாடல் இயற்கை வள அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி ஆகியோர் நேற்று தமது கடமைகளை பொறுப்பேற்றுள்ளனர்.

இவர்கள் கடந்த 8 ஆம் திகதி சனாதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் மேற்கொண்டிருந்தனர்.

# விளக்கமறியல் நீடிப்பு

தேசத்துரோகி கருணாவின் அடியாளாக செயற்பட்ட சச்சு மாஸ்ரரின் விளக்கமறியல் எதிர்வரும் 27 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

போர் நிறுத்த உடன்பாட்டை மீறும் வகையில் இராணுவக் கட்டுப்பாட்டு பகுதியான காத்தான்குடிக்கு ஆயுதங்களுடன் சென்ற வேளை கடந்த 30ஆம் திகதி பொலிசாரினால் அவரும் மற்றும் மூவரும் கைதாகி 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந் தார்கள்.

நேற்றைய தினம் மட்டக்களப்பு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது இவ்களை 27 ஆம் திகதி வரை காவலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார்.

# யாழ். வர்த்தகர்கள் பலர் மட்டக்களப்பு திரும்பினர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடிப் பகுதியில் யாழ். வர்த்தகர்களின் வர்த்தக நிலையங்களில் நேற்று வியாபார நடவடிக்கைகள் மீண்டும் வழமைக்குத் திரும்பின.

இதேவேளை மட்டக்களப்பு நகரம் மற்றும் இதர பகுதிகளில் இருந்த யாழ். வர்த்தககர்களின் வர்த்தக-நிலையங்களும் மீளத்திறப்பதற்கான முயற்சிகள் வர்த்தகர்களால் எடுக்கப்பட்டுள்ளன. தேசத்துரோகி கருணாவினால் வடபகுதி வர்த்தகர்கள் அண்மையில் பலவந்தமாக வெளியேற்றப் பட்டிருந்தமை தெரிந்ததே.

# ல.ச.கட்சி பொதுச் செயலர் பட்டிவீரக்கோன் இராஜினாமா!

(கொழும்பு)

லங்கா சமசமாஜக்கட்சியின் பொதுச்செயலர் பட்டிவீரக்கோன் தனது பதவியில் இருந்து இராஜினாமாச் செய்துள்ளார்.

இதற்கான கடிதத்தை அவர் நேற்று கட்சித் தலைவரிடம் சமர்ப்பித்துள்ளார்.

மேற்படி கட்சியைச் சேர்ந்த திஸ்ஸவிதாரண என்பவர் பட்டிவீரக்கோனுக்கு தெரியாது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அமைச்சு பதவியை ஏற்பதற்கு முனைந்தமை அவமானம். இதுவே எனது பதவி விலகலுக்குக் காரணம் எனத் தெரிவித்துள்ளார். லங்காசமசமாஜக்கட்சி அரசாங்கத்துக்கு ஆதரவு அளிக்குமே தவிர அமைச்சுப் பதவிகளை ஏற்காது எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (32)

# – சபாநாயகர் பதவிக்கு –

# டியு குணசேகராவை நிறுத்த ஐ.ம.சு.முன்னணி தீர்மானம்

(கொழும்பு)

சிறிலங்காவின் 13 ஆவது நாடாளுமன்றத்தின் சபாநாயகராக கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த டியு குணசேகராவை முன்மொழிவது என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நேற்று மாலை தெரிவித்துள்ளது.

முன்னதாக முன்னாள் பிரதமர் ரட்ணசிறிவிக்கிரமநாயக்கவை நியமிப்பதாக அறிவித்திருந்த போதும் அம்முடிவை மாற்றியமைத்துள்ளது.

இதேவேளை ஐ.தே.கட்சிசார்பில் லொக்குபண்டார சபாநாயகர் பதவிக்கு போட்டியிடுகின்றார்.

இதுஇவ்வாறிருக்க மேற்படி இருவரில் யாருக்கு ஆதரவு வழங்குவது என்பது தொடர்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இன்றும், நாளையும் கொழும்பில் கூடிஆராயும் போது முடிவெடுக்கும் எனத்தெரிவித்துள்ள மாவை சேனாதிராஜா இதன்போது நாடாளுமன்றம் கூடும் முன்னர் விடுதலைப்புலிகளின் தலைமையுடன் சந்தித்து கலந்துரையாடுவது தொடர்பான திகதி குறித்து ஆராய்வதுடன் எதிர்காலத்தில் நாடாளுமன்றத்தில் செயற்படுவது தொடர்பாகவும் ஆராயவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (32)

## தான்....

சிறீலங்கா சனாதிபதியும், சிங்களப் பௌத்த தேசிய வாதமும் முயற்சிகளை மேற்கொண்டிருந்த வேளையில், அதற்கான வாய்ப்பே இல்லாமல் அவ்விவகாரத்தை விடுதலைப் புலிகள் கையாண்டிருப்பதாக படைத்துறை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## ஜே.வி.பி....

வுடன் கூட்டுச்சேருவது தொடர்பாக சனாதிபதி ஆலோசித்து வருவதாகவும் அதேவேளை தேசிய அரசை அமைப்பது குறித்தும் ஆராய்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (32)

## பல்லாயிரம்...

அஞ்சலி செலுத் தக்கூடியவாறு நேர்த்தியாக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. காத்தான்குடி, பாலமுனை, காங்கேயனோடையைச் சேர்ந்த பல முஸ்லிம் மக்களும் உணர்வுபூர்வமாக இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். மட்டக்களப்பில் பல்வேறு பகுதிகளிலுமிருந்து பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் குழந்தைகளுடன் குடும்பமாக வந்து இம்மாவீரருக்கு தமது வீரவணக்கத்தைத் தெரிவித்தனர். பல அஞ்சலிப் பிரசுரங்களும் இங்கு விநியோகிக்கப்பட்டன. தொடர்ந்து அதிபர் புனித சுந்தரம் தலைமையில் நடைபெற்ற வீர வணக்கக் கூட்டத்தில் போராளிகள் சேனாதி, குயிலின்பன், நெல்சன் ஆகியோர் உரையாற்றினர்.

## விசுவமடு...

இன்று இலுப்பையடிச் சே னையில் மக்களின் வீரவணக்கத்திற்கு வைக்கப்படவுள்ளது. தொடர்ந்து தாண்டியடி மாவீரர் துயிலும் இல்லத்தில் இம்மாவீரரின் வித்துடல் விதைகக்கப்படும்.

மேலும், மட்டக்களப்பில் துரோகி கருணாவால் கடந்த 10ஆம் திகதி கப்டன் மாவேந்தன் (திருநாவுக்கரசு புவனேஸ்வரன், இறாலோடை காயங்கேணி - மட்டு), கப்டன் நம்பி (தர்மலிங்கம் பத்மநாதன், மாதவன் வீதி, கல்முனை -3, அம்பாறை), ஆதரவாளர் மோகன் (கருவங்கேணி-மட்டு) ஆகியோர் சுட்டுக் கொல்லப்பட்டமை தெரிந்ததே.

## கருணா....

கருணா குழுவினரைக் காப்பாற்றி சிறிலங்காவிற்குள் ஒரு இரகசிய இடத்தில் ஒழித்து வைத்திருப்பதாக தங்களுக்கு நம்பகமாகத் தெரிய வந்துள்ளதாகவே இப்பத்திரிகையின் கொழும்பு நிருபர் பி.கே.பாலச்சந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

கருணா தனது கட்டுப்பாட்டிற்குள் மட்டக்களப்பின் சில பகுதிகளை வைத்திருந்தபோது, போராளிகள் எவரையும் எந்தப் பத்திரிகையையோ, வானொலியையோ பார்க்க, கேட்க அனுமதிக்கவில்லை என்றும், ஒரு திறந்த சிறைச்சாலையில் வைத்திருப்பது போன்றே போராளிகளை வைத்திருந்தமை தெரியவந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கருணாவின் முகாமில் அவருக்குக் கீழே கட்டாயத்தின் பேரிலேயே போராளிகள் செயற்பட்டார்கள் என்பது உறுதியாகத் தெரிகிறது என்று குறிப்பிடும் இந்த நிருபர், அதற்கு ஆதாரமாக, இந்தப் போராளிகள் யாரும் தலைவர் பிரபாகரனின் படத்தைப் பார்க்கவோ வைத்திருக்கவோ கூடாது என்று கடுமையான தடை உத்தரவு போடப்பட்டிருந்த போதிலும், போராளிகள் இரகசியமாக தலைவரின் சிறிய படங்களை வைத்திருந்ததுடன், தினமும் காலையில், தலைவர் படத்தின் மீது வழமையாகச் செய்வது போன்று சத்தியப் பிரமாணம் எடுத்த பின்னரே தங்களது தினசரிக் காரியங்களில் ஈடுபட்டிருப்பதை விடுவிக்கப்பட்ட பல போராளிகள் தெரிவித்திருப்பதாகக் கூறியுள்ளார்.

தலைவர் பிரபாகரனைப் பற்றி தினமும் கருணா அவதூறான பல செய்திகளையும் தகவல்களையும் தெரிவித்து வந்த போதிலும், போராளிகள் எவரும் அதை நம்பவில்லை என்பதையும் விடுவிக்கப்பட்ட போராளிகள் உறுதிசெய்ததாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

1980ம் ஆண்டிலிருந்து யாருக்கெதிராக கொடிய யுத்தத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டாரோ, இறுதியாக அதே எதிரிகளிடம் மண்டியிட்டு சரணடைந்து பாதுகாப்புத் தேடியுள்ள கருணா, ஈழத்தமிழினத்திற்கு அவமானம் தேடித் தந்துள்ளார் என்று குறிப்பிடும் இப்பத்திரிகை, கருணாவின் கட்டுப்பாட்டில் கிழக்கிலங்கையின் சில பகுதிகள் இருந்துள்ள 38 நாட்களும் ஈழத் தமிழரின் வீரவரலாற்றில் கறை படிந்த காலப்பகுதி என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது